
இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us
# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 04, இதழ்: 79 சோபகிருது வருடம், புரட்டாதி மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(10.10.2023) ஹிஜ்ரி 1445, ரபிஉல் அவ்வல் - 24, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

Special offer
1st to 31st October 2023
KDK SINCE 1909 JAPAN
DISCOUNT 15% (On selected models only) *Conditions apply
Cash or Card
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries: 011 250 0823 | 011 236 8472 | 73 | 74



## நஸீர் அஹமட்டின் எம்.பி. பதவி வெற்றிடமானது
## பாராளுமன்ற செயலாளர் நாயகம் தகவல்



றிப்தி அலி

உயர் நீதிமன்றத் தீர்ப்பையடுத்து சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ஏ.ரோஹணதீர உத்தியோகபூர்வமாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நேற்று திங்கட்கிழமை (09) அறிவித்துள்ளார். இக்கடிதத்துக்கமைய, அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் பேச்சாளரொருவர் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார். 02 பக்கம்

# காஸாவை முடக்குக!



## அத்தியாவசிய சேவை விநியோகத்தை நிறுத்தி இஸ்ரேல் அதிரடி உத்தரவு

கே. சுபானி

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான மோதல் இன்று (10) 4ஆவது நாளாகவும் தீவிரமடைந்துவரும் நிலையில், காஸாவை 48 மணிநேரத்துக்குள் முற்றாக முடக்குமாறு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலாண்ட் (Yoav Gallant) பணித்துள் ளார். 02 பக்கம்

## இஸ்ரேலில் இலங்கையர் இருவர் மாயம்
### தகவல்களை அறிய தொலைபேசி இலக்கங்களும் அறிமுகம்



இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் சம்பவத்தினால் இலங்கையை சேர்ந்த இருவர் காணாமல் போயுள் ளதாக இஸ்ரேலிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, நேற்று முன்தினம் ஒருவர் காணாமல்போயிருந்த நிலையில், நேற்று (09) பெண்ணொருவர் காணாமல் போயுள்ளதாகவும் அவர் தொடர்பான தகவல்களை திரட்டுவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை பெற்றுக்கொள்ள... 02 பக்கம்

## இஸ்ரேலிய நெருக்கடி தொடர்பில்
### ரணில் அமைச்சரவைக்கு விளக்கம்



இஸ்ரேலில் இடம்பெற்ற தாக்குதல்கள், அங்கு வாழும் இலங்கையர்கள் மற்றும் இஸ்ரேலிய மக்கள் மீது ஏற்படுத்திய பாதிப்புகள் குறித்து உன்னிப்பாக அவதானம் செலுத்தி வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (09) அமைச்சரவைக்கு அறிவித்தார்.

அமைச்சரவைக்கு விசேட அறிவிப்பொன்றை முன்வைத்த ஜனாதிபதி, இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதோடு,... 02 பக்கம்

## பிரபல சிங்கள நடிகர் ஜெக்சன் அந்தனி காலமானார்



பிரபல முன்னணி சிங்கள நடிகர் ஜெக்சன் அந்தனி நேற்று திங்கட்கிழமை(09) காலமானார்.

வாகன விபத்துக்குள்ளாகி கடந்த 14 மாதங்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக அவரின் குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

1958ஆம் ஆண்டு ஜூலை மாதம் 08ஆம் திகதி ராகம பிரதேசத்தில் பிறந்த ஜெக்சன் அந்தனி தனது 65ஆவது வயதில் உயிரிழந்துள்ளார்.

திரைப்படமொன்றின் படப்பிடிப்புக்காக அநுராதபுரம் பிரதேசத்துக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பியபோது, தலாவ வீதி, மொரகொட பிரதேசத்தில் வைத்து அவர் பயணித்த கெப் ரக வாகனத்தை யானை தாக்கியே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இச்சம்பவத்தில் காயங்களுக்குள்ளான ஜெக்சன் அந்தனி, சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு கடந்த 14 மாதங்களாக சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 02 பக்கம்

# நீதித்துறைக்கு அச்சுறுத்தல்: கொழும்பில் ஆர்ப்பாட்டம்




02பக்கம்

### கமெண்ட் கந்தர்...



பலஸ்தீன விஷயத்தில பாம்புக்கும் வலிக்காமல் பொல்லும் உடையாமல் அடிப்பதுபோல கவனமா இருக்கிறது ஸ்ரீலங்கா அரசாங்கம்...

## எரிபொருள் விலை அதிகரிப்பு?

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான மோதல் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றநிலை உருவாகியுள்ளது.


இந்நிலைமை காரணமாக சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளதாக சர்வதேச அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டிருந்தாலும் ஆசிய நாடுகளுக்கு ஈரான் தொடர்ச்சியாக மசகு எண்ணெய் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றது. 02 பக்கம்

## வாகனம் தவிர்ந்த ஏனைய பொருட்களின் இறக்குமதி மீதான தடை நீக்கம்

வாகனம் தவிர்ந்த அனைத்து பொருட்களுக்குமான இறக்குமதி தடை நீக்கப்பட்டுள்ளதாக விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார். நேற்று நள்ளிரவு முதல் இது அமுலுக்கு வரும்.

### உஷ்



ஜனாதிபதி ரணில் தலைமையில் அமையவுள்ள புதிய அரசியல் கூட்டணி குழம்பிப் போயுள்ளதாம்...

எம்.பிக்கள் கட்சி மாறுவது தொடர்பில் உயர் நீதிமன்ற தீர்ப்பு அதிரடியாக அண்மையில் வெளிவந்ததால், பெரமுனவில் இருந்து வெளியேறி ரணிலை ஆதரிக்க எம்.பிக்கள் தயக்கம் காட்டுவதே இதற்கு காரணமாம்...

# வெள்ள அபாயம் தொடர்கிறது

## 75 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால் 75ஆயிரத்து 734 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மழையுடனான காலநிலை தொடர்ந்தால் நாட்டின் சில பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் நிலை இருப்பதாகவும் அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கடந்த செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி அத்தனகளு ஓயாவை அண்மித்த பிரதேசங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த வெள்ளப் பெருக்கு அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப் பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் நேற்று (09) அறிவித்திருந்தது.

குடா கங்கையில் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் அதனை அண்டிய பிரதேசங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான ஆபத்து இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நேற்று மாலையாகும்போது நீர்மட்டம் ஓரளவு குறைவடைந்திருந்தாலும் மழைவீழ்ச்சி தொடர்ந் தால் நீர்மட்டம் மேலும் அதிகரிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜின் மற்றும் நில்வளா ஆகிய கங்கைகளை அண்மித்த பிரதேசங்களில் சிறியளவான வெள்ளப்பெருக்கு ஏற்படும் நிலை இருப்பதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது. ஜின் கங்கையின் பத்தேகம அளவீட்டு நிலையம் மற்றும் நில்வளா கங்கையின் பனடுகம ஆகிய அளவீட்டு நிலையங்களில் நேற்று மாலை வரையில் நீர்மட்டம் குறைந்திருந்தாலும் நில்வளா கங்கையில் தல்கஹாகொட அளவீட்டு நிலையத்தின் நீர்மட்டம் நேற்று மாலை வரை குறைவடைந்திருக்கவில்லை என்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட அனர்த்தங்களில் இருவர் உயிரிழந்துள் ளதுடன் ஐவர் காயமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

மேலும், இன்றும் (10) நாட்டின் அநேகமான பிரதேசங்களில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வட மத்திய மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் ஒரு சில பிரதேசங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகளவான கடும் மழைவீழ்ச்சி பதிவாகலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. தென் மாகாணத்தில் கரையோரப் பிரதேசங்களில் காலையில் மழையுடனான காலநிலை நிலவக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

# உயர் நீதிமன்ற தீர்ப்பை நாங்களும் பின்பற்றுகிறோம்

## கூறுரைக்கிறார் சாகர காரியவசம்

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து நஸீர் அஹமட்டின் பாராளுமன்ற உறுப்புரிமையை நீக்குவதை உறுதிப்படுத்தி உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பையடுத்து, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அந்த கட்சியிலிருந்து விலகிய உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், அண்மைக்காலமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெருமளவான உறுப்பினர்கள் கட்சியின் ஒழுக்கத்தை மீறியுள்ளனர். இந்நிலையில் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க எதிர்பார்த்துள்ளதாக அக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகல காரியவசம் தெரிவித்தார்.

கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறாக செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அலகப்பெரும, டிலான் பெரேரா, அனுர யாப்பா ஆகியோருக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிசீலித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (09) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து நஸீர் அஹமட்டின் பாராளுமன்ற உறுப்புரிமையை நீக்குவதை உறுதிப்படுத்தி உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடிப்படையாக வைத்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருகிறோம். அவர்களிடம் முன்பே விளக்கம் கேட்டோம். இந்த வாரம் கூடி அவர்கள் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசிப்போம்.

நாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களினால் அரசியல் சமத்துவம் இல்லாமல் போய்விட்டது. ஆர்ப்பாட்டங்களால் பொருளாதாரம் மாத்திரமல்லாமல் அரசியல் சமத்துவம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் உருவாகியிருந்தன. பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவரை நாட்டின் ஜனாதிபதியாக நியமிப்பதற்காகவே 60 இலட்சம் மக்கள் வாக்களித்தார்கள். இருந்தபோதும் ஆர்ப்பாட்டங்களினால் பாராளுமன்றத்தில் ஒரு ஆசனத்தை மாத்திரம் கொண்டிருந்த கட்சியின் தலைவரை நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாக நியமிக்க நாங்களே நடவடிக்கை எடுத்திருந்தோம்.

இந்நிலைமைக்கு மத்தியில் நாட்டில் பல்வேறு விடயங்கள் இடம்பெறமுடியும். கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளுடன் நாடென்ற அடிப்படையில் முன்னோக்கிச் செல்லவேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. நாடு மாத்திரமல்ல அரசியல் கட்சி என்ற அடிப்படையிலும் முன்னோக்கிச் செல்லவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் இருக்கிறோம். எனவே, அதுதொடர்பில் எடுக்கவேண்டிய சகல நடவடிக்கைகளையும் எதிர்காலத்தில் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.

### காஸாவை முடக்குக!...

இந்நிலையில், காஸாவுக்கான உணவு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் செல்வதை இஸ்ரேல் தடைசெய் துள்ளது. காஸாவுக்கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் 2.3 மில்லியன் மக்கள் வாழும் காஸா இருளில் மூழ்கியுள்ளது. இதேவேளை, தாக்குதலால் குடிநீர் குழாய்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதால் குடிநீர்விநியோகம் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது உணவு உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் தடைப்படும் நிலை ஏற்பட்டுள்ளதால் காஸாவில் வசிக்கும் மக்கள் பட்டினியால் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், இருதரப்பு மோதலில் இஸ்ரேல் தரப்பில் 900பேர், பலஸ்தீன் தரப்பில் 600 பேர் உட்பட இருதரப்பிலும் ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதுடன் 05ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். இதேவேளை, காஸாவிலிருந்து ஒரு இலட்சத்து 23ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வெளியேறி யுள்ளனர். காஸாவில் ஒரு இலட்சம் ரிசர்வ் துருப்புகளை இஸ்ரேல் நிலைநிறுத்தியுள்ளது.

நூற்றுக்கணக்கான இஸ்ரேலியர்களை ஹமாஸ் போராளிகள் பணயக் கைதிகளாக பிடித்துவைத்துள்ளதால் இருநாடுகளுக்கிடையி லான முறுகல்நிலை முற்றியுள்ளது.

இதேவேளை, காஸா தெற்கு எல்லையைச் சுற்றியுள்ள பகுதிகளைக் கட்டுக்குள் கொண்டுவந் துள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி தெரிவித்துள்ளார்.

**இஸ்ரேல் அருகே அமெரிக்க போர்க் கப்பல்**

இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் தொடுத்ததையடுத்து, அமெரிக்கா இரண்டு போர்க்கப்பல்களை இஸ்ரேல் அருகில் நிறுத்தியுள் ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூவுடன் தொலைபேசியில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூடுதல் உதவி வழங்கப் படும் எனத் தெரிவித்தார்.

இரு நாட்டு அதிகாரிகள் ஆலோசனை நடத்தியதைத் தொடர்ந்து, அமெரிக்க போர்க் கப்பல்கள் இஸ்ரேலை நோக்கி நகர்ந்துள்ளன. அமெரிக்க விமானப்படை விமானங்களும் இஸ்ரேலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**இஸ்ரேல் மீது லெபனானிலிருந்தும் தாக்குதல்**

இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் தாக்குதல் நடத்திவரும் நிலையில், அவர்களுக்கு ஆதரவாக அண்டை நாடான லெபனானிலிருந்து ஹிஸ்புல்லா போராளிகள் இஸ்ரேலின் 03 இராணுவ நிலைகள் மீது ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தெற்கு லெபனானிலிருந்து ஏவுகணைகள் ஏவப்பட்ட பகுதியை குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் பதில் தாக்குதல் நடத்தியுள்ளது.

தங்கள் நாட்டிலிருந்து 40 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை இஸ்ரேல் ஆக்கிரமித்துவிட்டதாக 1967ஆம் ஆண்டு முதல் லெபனான் அரசு குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் மீது பலஸ்தீனத்தின் ஹமாஸ் போராளிகள் கடந்த சனிக்கிழமை (07) திடீர் தாக்குதல் நடத்தினர். இதனைத் தொடர்ந்து, எதிர்த்தாக்குதலாக காஸா முனை மீது இஸ்ரேல் படைகள் குண்டுமழை பொழிந்தன. இந்த இருநாடுகளுக்கிடையிலான மோதல் தீவிரமடைந்துள்ளதால் உலக நாடுகளிடையே பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இருநாடுகளுக்கிடையிலான போரில் ஆயிரத்து 300இற்கும் அதிகமானோர் கொல்லப்பட் டுள்ளதுடன் 5ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். அந்தவகையில் இஸ்ரேல் மீதான ஹமாஸ் போராளிகளின் தாக்குதலால் இஸ்ரேலில் 800இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 260பேர் ஓர் இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, அங்கு 2ஆயிரத்து 243க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை, பலஸ்தீன் மீதான இஸ்ரேல் தாக்குதலில் காஸாவில் 510 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 2ஆயிரத்து 750 பேர் படுகாயமடைந்துள்ளதுடன் மேற்கு கரைப் பகுதியில் 16 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 80 பேர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்ப டுகிறது.

இதற்கிடையே, "காஸாவை தரைமட்டமாக்கும் வரை ஓய மாட்டோம்" என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ சூளுரைத்துள்ளார். பலஸ்தீனத்தின் ஒரு பகுதியை பிரித்து கடந்த 1948ஆம் ஆண்டு புதிய நாடாக இஸ்ரேல் உருவாக்கப்பட்டதிலிருந்தே, இரு நாடுகளுக்கும் இடையே எல்லை பிரச்சினை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில், இஸ்ரேலின் எல்லையை ஒட்டிய பலஸ்தீனத்தின் காஸா முனை பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் போராளிகள் கடந்த சனிக்கிழமை (07) அதிகாலை இஸ்ரேல் மீது எதிர்பாராத திடீர் தாக்குதலை நடத்தினர். வெடிகுண்டு வைத்து எல்லை வேலிகளை தகர்த்த ஹமாஸ் போராளிகள் அதன் வழியாக இருசக்கர வாகனத்திலும் பாரா கிளைடிங்கில் வான் வழியாகவும் சக்திவாய்ந்த படகுகள் மூலம் கடல் மார்க்கமாகவும் எல்லையிலுள்ள 22 நகரங்களுள் ஊடுருவினர். அங்கு கண்மூடித்தனமாக பலரை சுட்டுக் கொன்றனர். வெளிநாட்டவர்கள் உட்பட ஏராளமான இஸ்ரேலியர்களை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றுள்ளனர். மேலும், 5ஆயிரம் ரொக்கெட்களை ஏவி இஸ்ரேலின் முக்கிய நகரங்களில் தாக்குதலும் நடத்தினர். இதைத் தொடர்ந்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹூ உடனடியாக போரை பிரகடனப்படுத்தினார். இஸ்ரேல் விமானப்படை விமானங்கள் காஸாவை முற்றுகையிட்டு குண்டு மழை பொழிந்தன. ஹமாஸ் போராளிகள் ஊடுருவிய தெற்கு இஸ்ரேல் பகுதிக்கு இராணுவம் விரைந்தது.

இந்நிலையில், இன்று 4ஆவது நாளாகவும் இரு தரப்பினரிடையேயான தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. ஹமாஸ் போராளிகளின் இந்த தாக்குதலுக்கு கடுமையான விலையை கொடுக்க வேண்டியிருக்கும் என ஏற்கனவே எச்சரித்திருந்த இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹூ, "காஸாவை தரைமட்டமாக்கும் வரை ஓய மாட்டோம்" என சூளுரைத்தார்.

அதேபோல், இரவோடிரவாக காஸா மீது 3ஆயிரம் ரொக்கெட்களை ஏவி இஸ்ரேல் பயங்கரவாதத் தாக்குதலில் காஸாவின் குடியிருப்புகள் பல தகர்க்கப்பட்டுள்ளன. 14 மாடி கட்டிடம் உட்பட பல கட்டடங்கள் நொறுங்கின. காஸாவின் 462 இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளன. முன்னதாக, இஸ்ரேல் எச்சரிக்கையை தொடர்ந்து, 20ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் காஸாவில் ஐ.நா. நடத்தும் பாடசாலைகளில் தஞ்சமடைந்தனர். ஒருபுறம் வான்வழித் தாக்குதல் நடத்தும் இஸ்ரேல் இராணுவம், மறுபுறம் எல்லை நகரங்களில் பதுங்கியிருக்கும் ஹமாஸ் போராளிகளுடன் துப்பாக்கிச் சூட்டிலும் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, காஸாவுக்கான மின்விநியோகத்தை இஸ்ரேல் துண்டித்துள்ளதால், மக்கள் இருளில் மூழ்கியுள்ளனர். இனி அடுத்த பல நாட்களுக்கு எரிபொருள் உள்ளிட்ட எந்த அத்தியாவசியப் பொருட்களும் காஸாவுக்குள் செல்ல இஸ்ரேல் அனுமதிக்காது. இந்த போர் முடிவுக்கு வர நீண்ட நாட்கள் எடுக்கும் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹூ தெரிவித்துள்ளார். இதனால் தரை வழியாக இஸ்ரேல் இராணுவம் காஸாவில் நுழையும் பட்சத்தில் அது அதிகப்படியான உயிர்ப்பலிக்கு வழிவகுக்கும் என்றும் அஞ்சப்படுகிறது.

**பணயக் கைதிகளாகும் இஸ்ரேலியர்கள்**

அதேசமயம், ஹமாஸ் போராளிகள் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் எனப் பலரை பிடித்துச் சென்றிருப்பதாகவும் பணயக் கைதிகளை வைத்து இஸ்ரேல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஹமாஸ் போராளிகளை விடுவிக்க பேரம் பேசலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பணயக் கைதியாக பிடித்துச் செல்லப்பட்டவர்களில் பிரித்தானியர்கள் உள்ளிட்ட சில வெளிநாட்டவர்களும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் சர்வதேச நாடுகள் இதில் கவலை கொண்டுள்ளன. இதற்கிடையே, இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்கி உதவுவதாக அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், பலஸ்தீனத்தை பாதுகாக்க முழு உரிமை உண்டு என ஹமாஸுக்கு ஈரான் ஆதரவு தெரிவித்துள்ளது.

**இசை நிகழ்ச்சியில் கொடூரம்**

இதேவேளை, காஸா எல்லையை ஒட்டிய இஸ்ரேலின் நெகேவ் பாலைவனப் பகுதியில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியில் ஏராளமான வெளிநாட்டவர்கள் பங்கேற்றிருந்த நிலையில் பாராகிளைடிங் மூலம் உள்நுழைந்த ஹமாஸ் போராளிகள் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் 260 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதன்போது தப்பியோடியோரை பணயக் கைதியாக ஹமாஸ் போராளிகள் பிடித்துச் சென்றுள்ளனர். இதில் ஜேர்மனியை சேர்ந்த பெண் டெட்டூ கலைஞரான ஷானி லோக் (வயது 30) என்பவரை கொலை செய்து அரை நிர்வாண கோலத்தில் வாகனத்தின் பின்பக்கம் சடலத்தை போட்டு ஹமாஸ் தீவிரவாதிகள் கொண்டு செல்லும் வீடியோ காட்சிகள் ஏற்கனவே வெளியாகி இருந்தன. கொல்லப்பட்ட நபர் இஸ்ரேல் இராணுவ வீரர் என ஹமாஸ் தெரிவித்திருந்த நிலையில், அவர் ஷானி லோக் என்பது நேற்றுமுன்தினம் உறுதி செய்யப்பட்டது. இதுபோல பல வெளிநாட்டவர்களை ஹமாஸ் போராளிகள் பணயக் கைதியாக பிடித்து சென்றுள்ளனர்.

மேலும், மற்றுமொரு யுவதியொருவரை மோட்டார் சைக்கிளில் கொண்டு செல்லும் போராளிகள், அவரது ஆண் நண்பரை கைகளை கட்டி இழுத்துச் செல்லும் வீடியோ நேற்றுமுன்தினம் வெளியாகியது. அந்த யுவதி தன்னை கொல்ல வேண்டாம் எனவும் ஆண் நண்பரை விட்டு விடுமாறும் கெஞ்சியபடி செல்கிறார்.

### இஸ்ரேலிய நெருக்கடி...

அவர்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வெளிவிவகார அமைச்சுக்கு பணிப்புரை விடுத்தார்.

மேலும், இலங்கைக்கு சுற்றுலாப் பயணிக ளாகவும் ஊழியர்களாகவும் வருகை தந்துள்ள இஸ்ரேலியர்கள் தமது நாட்டுக்குத் திரும்புவ தற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் இலங்கையில் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குமாறும் பொலிஸ் திணைக்களத்துக்கு ஜனாதிபதி அறிவித் தார்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் எனும் இரு நாட்டுக் கொள்கைக்கான இலங்கையின் நீண்ட கால ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்திய ஜனாதிபதி, பலஸ்தீனத்தில் ஹமாஸ் அமைப் பினரால் இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குத லுக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம் தெரிவிப் பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் குறித்து சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், இவ்வாறான தாக்குதல்களை நியாயப் படுத்த முடியாது எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இந்த நெருக்கடி நிலை உலகளாவிய எரி பொருள் விலையில் ஏற்படுத்தக்கூடிய கடுமையான தாக்கத்தை சுட்டிக்காட்டிய ஜனாதி பதி, ஆபிரிக்க ஒன்றியத்தின் பரிந்துரையின் படி, இந்த மோதலை உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தார்.

தொடர்ந்தும் இடம்பெற்று வரும் இந்த மோதல்கள் காரணமாக எரிபொருளின் விலையில் நீண்டகால அதிகரிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் இது இலங்கை உள்ளிட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

### எரிபொருள் விலை அதிகரிப்பு?...

இருந்தபோதும் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத் துக்கும் இடையிலான மோதல் மேலும் உக்கிர மடைந்தால் ஈரானின் மசகு எண்ணெய் விநியோ கத்துக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்க முடியாது. இந்நிலையில், மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை உலக சந்தையில் 2.25 டொலர்களாக அதிகரித்துள்ளது. அதன் புதிய விலை 86.83 டொலர்களாகும்.

இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் மேலும் தீவிரமடையும் பட்சத்தில், சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிக்கும் என்பதால் எரிபொருட்களுக்கான உள்நாட்டு விலைகள் அதிகரிக்கப்படலாம் என்று அஞ்சப்படுகின்றது.

### இஸ்ரேலில் இலங்கையர்...

எதிர்பார்த்துள்ளதாகவும் இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித் துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு வரை கிடைத்த தகவல்களுக்கமைய காஸா பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் இலங்கையர் ஒருவர் காயங்களுக்குள்ளாகியிருந்ததுடன் ஒருவர் காணாமல் போயிருந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலிலுள்ள இலங்கை பணியாளர்களின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களை கண்டறிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் தொடர்பான தகவல்களை அறிந்துகொள்வதற்காக 02 தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

இந்த மோதலின் காரணமாக இலங்கையர் ஒருவர் இலேசான காயத்துக்குள்ளாகியுள்ளார். இவர் தொடர்பான தகவல்களைத் தொடர்ந்து திரட்டிவருகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இஸ்ரேலில் சுமார் 8ஆயிரம் இலங்கையர்கள் பணிபுரிகின்றனர். 90 வீதமானோர் பராமரிப்பு சேவை தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இங்குள்ள இலங்கையர்கள் குறித்த தகவல்களை அறிந்துகொள்வதற்காக இரண்டு தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 0094716640560 என்ற வட்ஸ்அப் இலக்கத்தி னூடாக அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 1989 என்ற துரித தொலைபேசி இலக்கத்தினூடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

### நஸீர் அஹமட்டின் எம்.பி....

"இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தீர்மானமொன்றினை மேற்கொண்ட பின்னர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட விருப்பு வாக்குப்பட்டியலில் அடுத்ததாக உள்ள நபரின் பெயர் விரைவில் பாராளுமன்ற உறுப்பினராக வர்த்தமானியில் அறிவிக்கப்படும்" என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவியில் இருந்து சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் நீக்கப்பட்டமை சட்ட ரீதியானது என உயர் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை (06) அறிவித்தது.

"வரலாற்று முக்கியத்துவமிக்க இந்த தீர்ப்பினால் அமைச்சர் நஸீர் அஹமட், தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியினை இழக்கின்றார்" எனத் தெரிவித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு கடிதமொன்றினை அனுப்பியிருந்தார்.

இதனையடுத்தே நஸீர் அஹமட்டின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நீதிபதிகளுக்கு அச்சுறுத்தல்:...

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கான நீதியை நிலைநாட்டுமாறும் நீதிமன்ற நீதிபதிகளுக்கு அச்சுறுத்தல் விடுப்பதை தவிர்க்குமாறும் கோரி முல்லைத்தீவு நீதிபதிகள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கொழும்பு, புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் நேற்று (09) இடம் பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி நுவன் போபகே ஆகியோரின் இணைத்தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் முல்லைத் தீவைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான சட்டத்தரணிகள் கலந்துகொண்டனர்.

மேலும், நீதிபதி ரி. சரவணராஜாவின் இராஜினாமா தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

நீதித்துறையில் கை வைக்கவேண்டாம் என்று கோரி பேரணியாக வந்த போராட்டக்காரர்கள் புதுக்கடை நீதவான் நீதிமன்றத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுபோன்ற செயற்பாடுகளுக்கு இடமளித் தால் நாட்டில் நீதித்துறையின் உயரிய தன்மை இல்லாமல் போகும் என்றும் நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க அரசாங்கமும் நீதிச் சேவை ஆணைக்குழுவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகை யில்,

நீதிபதியொருவர் தன்னால் பணியாற்ற முடியாது, எனக்கு அச்சுறுத்தல் விடுக்கிறார் கள், தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவித்து அவரின் இராஜினாமா கடிதத்தி லேயே குறிப்பிட்டுவிட்டு நாட்டைவிட்டு வெளியேறிய துர்ப்பாக்கிய நிலை உருவாகி யுள்ளது.

இதற்கு தொடர்ச்சியாக நாங்கள் இடமளித் தால் இந்த நாட்டில் நீதித்துறையின் உயரியத் தன்மை என்று ஒரு சொல் கூட பேச முடியாத நிலை உருவாகும். அதன் காரணமாக, வடக்கு கிழக்கின் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்தும் சட்டத்தரணிகளை அழைத்து வந்து கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்கிறோம்.

எனவே, இந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசாங்கமும் நீதிச் சேவை ஆணைக்குழுவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தச் சம்பவத்தின் பின்னணி தொடர்பில் விசாரணை களை முன்னெடுத்து சம்பந்தப்பட்ட நீதிபதிக்கு நீதியைப் பெற்றுக்கொக்க வேண்டும். இல்லாவிட்டால் நீதித்துறையின் உயரியத் தன்மை இல்லாத வரலாறு உருவாகக் கூடும் என்றார்.

### பிரபல சிங்கள நடிகர்...

நாட்டின் கலாசாரத்தை சர்வதேசத்துக்கு எடுத்துச் சென்ற அவர், நடிகர், பாடலாசிரியர், பாடகர், எழுத்தாளர்,திரைக்கதை எழுத்தாளர், அறிவிப்பாளர் மற்றும் வரலாற்று ஆய்வாளர், சிறந்த பத்திரிகையாளர் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் என பல்வேறு துறைகளில் மிளிர்ந்து விளங்கினார்.

தேசிய மற்றும் சர்வதேச விருதுகளை பெற்றுக்கொண்டுள்ள ஜெக்சன் அந்தனி, தனது அனுபவத்தை எதிர்கால சந்ததியினருக்கு பெற்றுக்கொடுப்பதற்காக பல்வேறு அர்ப்பணிப்புகளையும் செய்துள்ளார்.

ஆரம்பகாலத்தில் பல்கலைக்கழக நாடக மேடைகளில் சிறந்த நாடக கலைஞராக திகழ்ந்த இவர், பின்னர் நெவில் டயஸ் சுபசிங்கவின் வருவென் யன மின்ஸ்ஹூ மற்றும் மானவயோ ஈ.எம்.டி. உபாலியின் மெத்தனின் மாருவெனு ஆகிய திரைப்படங்களில் நடித்துள்ளார். பின்னர் அவர் மராசத், மதுர ஜவனிகா, லோமா ஹன்சா, தவாலா பீஷானா, அத், மோரா மற்றும் தாராவோ, கிலேதி போன்ற மேடை நாடகங்களிலும் நடித்திருக்கிறார். இவை அவருக்கு சினிமாத் துறையில் தேசிய அங்கீகாரத்தை பெற்றுக் கொடுத்ததுடன் தேசிய நாடக விழாவில் சிறந்த நடிகருக்கான விருதையும் பெற்றுக்கொடுத்தது.

1993ஆம் ஆண்டு திரைப்படத்துறைக்குள் பிரவேசித்த ஜெக்சன் குரு கெதர, சிட்டி, அயோமா, லொகு துவ ஆகிய திரைப்படங்களிலும் நடித்துள்ளார். தனது ஆரம்ப நாட்களில் பாவா துகா, பவா கர்மா, கினி அவி சஹா கினி கேலி, அஸ்வெசுமா, அக்னி தஹாயா, சூரிய அரணா, மில்லே சோயா போன்ற திரைப்படங்களில் தனது தனி திறமையை வெளிப்படுத்தினார். இதற்கிடையில், அவர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் முக்கிய பங்காற்றியிருந்தார்.

1992இல், அவர் தனது முதல் தொலைக்காட்சி நாடகமான எசல களுவர இயக்கினார். அவர் இயக்கிய அட்ரஸ் நா திரைப்படத்துக்காக 2015ஆம் ஆண்டு தெரண திரைப்பட விருதுகளில் சிறந்த நடிகருக்கான விருதை பெற்றார். இந்நிலையில், 16 தடவைகள் சிறந்த நடிகருக்கான விருதை இவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

புணாபத்ர குஹூம்புபெனியா அல்லது சினிமாவின் அசகாய நடிகர் என்று அழைக்கப்படும் ஜெக்சன் அந்தனியின் மறைவு இந்நாட்டு கலைத்துறைக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இதேவேளை, ஜெக்சனின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 03 மணிக்கு சென். போல்ஸ் தேவாலயத்தில் இடம்பெறுமென உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 23ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்**: புத்திரர்களால் வீண் பிரச்சினைகள் உருவாகலாம், தேவையற்ற செலவுகள் மன நிம்மதியைக் கெடுக்கும்.

**ரிஷபம்**: வீடு வாகனங்களால் வீண் செலவினங்கள், தொல்லைகள் ஏற்படலாம். தாய்க்கு பீடை.

**மிதுனம்**: மனத்துணிவுடன் எதையும் சாதிப்பீர்கள், நண்பரிடமிருந்து உங்களுக்கு உதவிகள் கிடைக்கும்.

**கடகம்**: வீண் பேச்சை தவிர்த்துக் கொள்ளுங்கள், கட்டாயச் செலவினங்களால் தொல்லைகள் உண்டு.

**சிம்மம்**: உடல் நோய்கள் குணமடையும் நாள், எந்தச் சவால்களையும் முறியடிப்பீர்கள்.

**கன்னி**: வெளியிடத்தில் அல்லது குடும்பத்தில் அவமானம் ஏற்படும், வீண் அலைச்சல்களால் உடல் அசதி.

**துலாம்**: கடந்த நாட்களில் உங்கள் கைநழுவிப் போனவை மீண்டும் கிடைக்கும், புதிய நண்பர்களை சந்திப்பீர்கள்.

**விருச்சிகம்**: புகழ், கீர்த்தி, செல்வாக்கு உயரும், செய் தொழிலில் திட்டமிட்ட இலாபங்களை அடைவீர்கள்.

**தனுசு**: தடைப்பட்டிருந்த உங்கள் வெளிநாட்டுப் பயணம் சிறப்பாக அமையும். பூர்வீக சொத்துகளால் சங்கடங்கள் தோன்றும்.

**மகரம்**: கடுமையான அலைச்சலுடன், காரியக் கேடும் ஏற்படும், கோபத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

**கும்பம்**: நீண்ட நாள் காதலியை சந்திப்பீர்கள், பங்கு வியாபாரத்தில் எண்ணிய லாபத்தை அடைவீர்கள்.

**மீனம்**: நோயிலிருந்து விடுதலை, நீண்ட நாள் சத்துருகள் உங்களிடம் பணிவாக நடந்துகொள்வார்கள்.

| | |
|---|---|
| **திதி** | : ஏகாதசி பி.ப.3.09 வரை பின் துவாதசி |
| **நட்சத்திரம்** | : மகம் முழுவதும் |
| **யோகம்** | : மரண யோகம் முழுவதும் |
| **வார சூலை** | : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : மு.ப. 7.57 – 8.57 மணி வரை |
| **ராகு காலம்** | : 2.57 – 4.27 மணி வரை |
| **எமகண்டம்** | : 8.57 – 10.27 மணி வரை |
| **குளிகை** | : 11.57 – 1.27 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : மகர ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிஷ்டம்** | : ஆயிலியம்,கேட்டை,ரேவதி; (பிறந்தவர்களுக்கு) |
| **விஷேட தினம்** | : ஏகாதசி விரதம் |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325 078-6759739**

# நில்வலா கங்கை தடுப்பணையை மாற்றவும் கிளை ஆற்று தடைகளை அகற்றவும் தீர்மானம்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கலந்துரையாடல்



மாத்தறை நில்வலா கங்கை தடுப்பணையிலுள்ள ஒரு பகுதியை மாற்றுவதற்கும் கிளை ஆற்றிலுள்ள தடைகளை அகற்றுவதற்கும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டத்தின்போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மாத்தறை மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்நிலையில், நில்வலா கங்கையில் கட்டப்பட்டுள்ள தடுப்பணையால்தான் இந்த நிலைமை என மக்கள் தரப்பிலிருந்து குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

வறட்சி காலத்தில் ஆற்றுநீரில் கடல்நீர் கலக்காமல் இருப்பதற்காகவும், சுத்தமான குடிநீரைப் பெறும் நோக்கிலும்தான் இந்தத் தடுப்பணை அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மாத்தறை மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால தொழில்நுட்ப ரீதியிலான தீர்வைக் காண்பதற்கான விசேட கூட்டம் நேற்று நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்றது.

இந்த விசேட கூட்டத்தில் அமைச்சருடன், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நீர்ப்பாசனத் துறை இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர்களான நிபுண ரணவக்க, புத்திக பத்திரண, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அதிகாரிகள், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள், நீர்ப்பாசனத் துறை அமைச்சின் அதிகாரிகள், மாத்தறை மாவட்ட செயலாளர் உட்பட அதிகாரிகள், பொறியியலாளர்கள் என முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தின்போது வெள்ள அனர்த்தங்களைக் கட்டுப்படுத்துவதற்காக குறுகிய கால மற்றும் நீண்ட கால தொழில்நுட்ப ரீதியில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் விரிவாக ஆராயப்பட்டன.

இவ்வேளையிலேயே அந்தத் தடுப்பணையில் ஒரு பகுதியை மாற்றுவதற்கும் அந்த ஆற்றிலுள்ள தடைகளை அகற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொறியியலாளர்களின் மேற்பார்வையின் மூலம், இராணுவம் மற்றும் கடற்படை அதிகாரிகளின் உதவியுடன் இந்த ஆரம்பகட்ட வேலைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அதேபோல் எதிர்காலத்தில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாதிருப்பதற்காக எவ்வாறான திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் நீர்வழங்கல் அமைச்சும், நீர்ப்பாசனத் துறை அமைச்சும் இணைந்து ஒரு கூட்டு அமைச்சரவைப்பத்திரத்தை முன்வைக்கவும் கொள்கை ரீதியில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

# தொற்று நோய்கள் பரவும் ஆபத்து: சுகாதார அமைச்சு எச்சரிக்கை!

அசாதாரண காலநிலையால் பெய்துவரும் கன மழையால் தொற்று நோய்கள் பரவும் ஆபத்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் டாக்டர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளதாவது,

ஆறுகள், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் குடிநீர் வழங்கும் நிலையங்களில் வெள்ள நீர், அசுத்தமான நீர் கலந்திருப்பதால் கொதித்தாறிய நீரை பருகவேண்டும்.

அதேபோல் கீரை வகைகள், பச்சை காய்கறிகள், பழங்கள் ஆகிய உணவுகளை எடுத்துக்கொள்ளும் போது அவதானம் தேவை என்றார்.

உணவுகளை உட்கொள்ளும்போது அவதானம் இல்லாவிட்டால் தொற்று நோய்கள் பரவும் ஆபத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
Ministry of Health, Nutrition & Indigenous Medicine

அத்தோடு இடைத்தங்கள் முகாம்களில் தங்கியுள்ளோருக்கு கொப்புளங்கள், கண் வலி, சுவாசம் தொடர்பான நோய்கள் பரவக்கூடிய ஆபத்துகள் இருப்பதாகவும் அவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் வைத்தியரை நாடுமாறும் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் டாக்டர் ஜி.விஜேசூரிய மேலும் தெரிவித்துள்ளார்.

# கலாபூஷணம் விருது வழங்கும் விழா - 2023

எம்.எஸ்.எம்.ஸாகிர்

கலைத்துறைக்கு உன்னதமான அபிமானத்துடன் சேவையாற்றி தலைமுறைகள் கடந்து கலைகளால் தேசத்தின் எதிர்காலத்தை உலகத் தரத்துக்குக் கொண்டுசென்ற கலைஞர்களுக்கான மகுடம் சூட்டும் 38ஆவது கலாபூஷணம் அரச விருது விழா - 2023 நாளை 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு மஹரகம தேசிய இளைஞர் சேவை மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெறும் இக்கௌரவிப்பு விழாவில் 2022ஆம் ஆண்டு கலாபூஷணம் விருதுக்காக தெரிவுசெய்யப்பட்ட முஸ்லிம் கலைஞர்களான ஏ.சி.ராஹில் - நிந்தவூர் (இலக்கியம்), எம்.எம்.ஜமால்தீன் - ஏறாவூர் (இலக்கியம்), ஹாஜா அலாவுதீன் - பாலாவி (இலக்கியம்), எம்.கே.எம்.அஸ்வர் - மொரட்டுவ (ஊடகம்), எஸ். தஸ்தகீர் - கல்முனை (இலக்கியம்), யூ.எல்.கலீல் ரஹ்மான் - சம்மாந்துறை (ஊடகம்), ஏ.யூ.எல்.அப்ரா உம்மா - கண்டி (இலக்கியம்), ஏ.இஸ்ஸதீன் - சாய்ந்தமருது (நாட்டுப்புற கலைகள் - கோலாட்டம்), இஸட்.ஏ.எம். ஹனீபா - கண்டி (இலக்கியம்), ஏ.எல்.ஏ. சுப்ஹான் அக்பர் - மாவடிப்பள்ளி (பாடல்) ஆகிய 10 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# இலங்கை தனிப்பட்ட தரவு பாதுகாப்பு அதிகாரசபைக்கு தலைவர், பணிப்பாளர் சபையினர் நியமனம்

நாட்டில் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாக்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தனிப்பட்ட தரவு பாதுகாப்பு அதிகாரசபைக்கு தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

மாலைதீவிலுள்ள ஏர்னஸ்ட் என்ட் யங் (Ernst & Young ) நிறுவனத்தின் சிரேஷ்ட பட்டயக் கணக்காளரும், முன்னாள் ஆலோசகருமான அர்ஜுன ஹேரத் இதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அரச தரப்புச் சட்டத்தரணி நிசித் அபேசூரிய, ஜனாதிபதி சட்டத்தரணி சௌமியா அமரசேகர, டிஜிட்டல் சட்ட நிபுணரும் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்ட வரைவு குழுவின் தலைவருமான ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன, சர்வதேச தர நிர்ணய அமைப்பின் சான்றளிக்கப்பட்ட கணக்காய்வாளரும் தொழில்நுட்ப முகாமைத்துவ நிபுணருமான பிம்சர செனவிரத்ன, பொறியியல் மற்றும் டிஜிட்டல் மூலோபாய நிபுணர் ஷெஹான் விஜேதிலக்க ஆகியோர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க இலங்கையின் தனிப்பட்ட தரவு பாதுகாப்புச் சட்டம். 19 மார்ச் 2022ஆம் திகதி சபாநாயகரால் சான்றளிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதோடு, இதன்மூலம் தெற்காசியப் பிராந்தியத்தில் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்காக சட்டம் இயற்றிய முதல் நாடாக இலங்கை மாறியுள்ளது.

# வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டால் சுங்க வருமானம் வீழ்ச்சி

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு



வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக சுங்க வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்லவில் நேற்று (09) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், சுங்கத் திணைக்களத்துக்கு கிடைக்கும் வரி வருமானத்தில் 25 வீதம் வாகன இறக்குமதி மூலம் கிடைக்கிறது. இந்நிலையில், வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக சுங்க வருமானம் பாதிப்படைந்துள்ளது.

இந்த வருடம் சுங்க வருமானத்தின் இலக்கு 1,220 பில்லியன் ரூபாவாக இருந்தது. ஆனால், 2018ஆம் ஆண்டில் 918 பில்லியன் ரூபா மட்டுமே சுங்க வருமானமாக ஈட்டப்பட்டது. இவ்வருடம் 1220 பில்லியன் ரூபா வருமானத்தை இலக்காகக்கொண்டுள்ளபோதும் சுங்கத்தின் பிரதான வருமானமாக இருந்த பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி கட்டுப்பாடுகள் அந்த இலக்கை எட்டுவதற்கு தடையை ஏற்படுத்தியுள்ளது - என்றார்.

# பம்பலப்பிட்டி ரயில் நிலையத்துக்கு புதிய மேம்பாலம்

## 10 நாட்களுக்குள் தற்காலிக பிரவேச வீதி அமைக்க அறிவுறுத்தல்

கொழும்பு, பம்பலப்பிட்டி ரயில் நிலையத்திலிருக்கும் பழுதடைந்த பயணிகள் மேம்பாலத்துக்குப் பதிலாக புதிய பாலம் அமைக்கும் பணியை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னவுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இது குறித்து அறிவித்துள்ளார்.

அதுவரை ரயில் நிலையத்துக்கு பயணிகள் செல்வதற்கு வசதியாக பத்து நாட்களுக்குள் தற்காலிக பிரவேச வீதியொன்றை அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், தற்போதுள்ள மேம்பாலத்தை இடித்துவிட்டு, புதிய பாலம் கட்டும் பணியை ஐந்து மாதங்களுக்குள் பூர்த்திசெய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசர தேவையாகக் கருதி அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்துக்கு இது தொடர்பான பணியைக் கையளிக்குமாறும் ஜனாதிபதி அறிவித்துள்ளதோடு, அதற்காக 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

# எமது நிலங்களை அபகரிப்பதும், அழிப்பதும் குற்றமாகும்

## மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல்

மன்னார் நகர் நிருபர்

அபிவிருத்தி எனும் எமது மாவட்டத்தின் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதையும், அழிக்கப்படுவதையும் நாம் அனுமதிக்க முடியாது என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் கரித்தாஸ்-வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் நேற்று (09) காலை 11 மணியளவில் மன்னார் வாழ்வுதயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,

கரித்தாஸ்-வாழ்வுதயம் நிறுவனமானது இயற்கை வளங்களைப் பாதுகாப்போம் எனும் திட்டத்தை கடந்த இரண்டு ஆண்டுகளாக மன்னார் மாவட்டத்தில் அமுல்படுத்தி வருகின்றது.

இப்பூமியானது நாம் அனைவரும் வாழ்வதற்கான பொது இல்லம். ஆகவே, நாம் எமது முன்னோரிடமிருந்து எவ்வாறு வளத்தோடும். செழிப்போடும் இந்த இயற்கை வளங்களைப் பெற்றுக்கொண்டோமோ இவ்வாறு நமது நாளைய தலைமுறையிடம் கையளிக்க வேண்டிய கடப்பாடு நமக்குள்ளது.

இதனால் குறிப்பிட்ட நபர்கள் இதை அபகரிப்பதும், அழிப்பதும் குற்றமாகும்.

மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களுக்கு





அச்சுறுத்தலான முக்கிய விடயங்களை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

கனியவள அகழ்வு, காற்றாலை திட்டம், சட்டவிரோத மண் அகழ்வு, இந்திய இழுவைப் படகுகளில் அத்துமீறிய நுழைவு, காடழிப்பு, கடலோர கண்டல் தாவரங்கள் அழிப்பு, வனவிலங்குகள் சரணாலயத்துக்குச் சொந்தமான காணிகள் தனி நபர்களால் அபகரிக்கப்படுதல் என்பனவாகும்.

இவற்றால் நாம் எதிர்நோக்கும் பாரிய விளைவுகள், பேரழிவுகள் பற்றி மக்கள் தெளிவடைய வேண்டும். சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

இயற்கையைப் பாதுகாக்கும் பொறுப்புடைய அதிகாரிகளை உடன் நடவடிக்கை எடுக்குமாறு வினயமாக கேட்டுக்கொள்கிறோம். அதேவேளை, தொண்டு நிறுவனங்களும், சர்வதேச நிறுவனங்களும் இயற்கைவள பாதுகாப்புச் செயற்பாட்டாளர்களும் இயற்கைவள சட்டவாளர்களும், பொதுமக்களும் இணைந்து செயலாற்றுவதற்கு அழைப்பு விடுக்கிறோம்.

# தந்தையைக் காணவில்லை; தவிக்கும் பிள்ளைகள்



வவுனியா, சிதம்பரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருகனூர் கிராமத்தில் வசித்துவரும் அன்டன் ஜொன்சன் என்பவரை கடந்த 04.10.2023 அன்று தொடக்கம் காணவில்லை என தெரிவித்து அவரின் மனைவியால் சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்த குறித்த நபர் கடந்த 04ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வீட்டிலிருந்து வெளியேறிய நிலையில் இன்றுவரை வீடு திரும்பவில்லை என மனைவி தெரிவித்துள்ளார்..

வீட்டிலிருந்து அவர் வெளியேறுகையில் நீல நிற சாரம் மற்றும் ரோஸ் கலர் சட்டையும் அணிந்து சென்றுள்ளார். எனவே, இவரைக் கண்டவர்கள் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது 0776289460 (மகன்), 0774136383 (மனைவி), 0762477411 (மகள்) ஆகிய இலக்கத்திற்கு அறியத்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது..

# யாழில் பொலிஸாரைத் தாக்க முயன்றவருக்கு துப்பாக்கிச் சூடு

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியில் பல சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட நபரை கைதுசெய்ய சென்ற பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முற்பட்டபோது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

பருத்தித்துறை அல்வாய் பகுதியில் வழிப்பறி, போதைப்பொருள் விநியோகம் மற்றும் சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டதாக குறித்த நபர் மீது பல குற்றச்சாட்டுகள் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டன.

எனினும் பயத்தின் காரணமாக பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தில் முறையிடாத நிலையில் ஒருசில குற்றச்சாட்டுகள் தொடர்பில் பொலிஸாரால் அந்நபர் தேடப்பட்டு வந்துள்ளார்.

இவ்வாறான நிலையில் அவரை கைது செய்வதற்காக பொலிஸார் சென்றபோது கத்தியைக் காட்டி பொலிஸாருடன் தர்க்கம் புரிந்த நிலையில் பாதுகாப்புக் கருதி பொலிஸார் காலில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கைதுசெய்துள்ளனர்.

# மின் துண்டிக்கச் சென்ற ஊழியர்கள் மீது தாக்குதல்

ரஸீன் ரஸ்மின்

மதுரங்குளி, முக்குத்தொடுவாய் பிரதேசத்தில் மின்சாரத்தைத் துண்டிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் இருவர் மீது மணல் விற்பனை செய்யும் வர்த்தகர் உள்ளிட்ட சிலர் கடுமையாக தாக்கியுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவரும் புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான புத்தளம் மின்சார அதிகாரசபை அலுவலகத்தில் மின் இணைப்பை துண்டிக்கும் பணியில் ஈடுபடும் இரண்டு ஊழியர்களே இவ்வாறு தாக்குதலுக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மணல் விற்பனை செய்துவரும் வர்த்தகரின் வியாபாரத் தளத்தில் மின்சாரத்தை துண்டித்துவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்தபோதே சந்தேக நபர்கள் தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மின்சாரத்தை துண்டிக்கும் ஊழியர்கள் இருவரும் குறித்த இடத்துக்கு மின்சாரத்தை துண்டிப்பதற்காக சென்றபோது, அங்கிருந்த பெண்ணொருவரிடம் தெரிவித்துவிட்டே மின்சாரத்தைத் துண்டித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஒக்டோபர் 10ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# ரணிலின் கருத்தில் உள்ள நியாயம்!

தனது புகைப்படத்தை கட் அவுட்கள் மற்றும் சுவரொட்டிகளில் காட்சிப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், அனைத்து சுவரொட்டிகளிலும் தனது புகைப்படத்தை காட்சிப்படுத்துவதைத் தவிர்க்குமாறு ஜனாதிபதி ஏனைய அரசியல் தலைவர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசியல் கோஷம் அன்றி மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே இன்றைய தேவை என வலியுறுத்திய ரணில் விக்கிரமசிங்க, கட் அவுட் மற்றும் அரசியல் கோஷங்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்தை அதல பாதாளத்திற்கு இழுத்துச் சென்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கோஷங்கள் மற்றும் கட் அவுட் அரசியலுக்குத் தான் எப்போதும் எதிரானவன் என்பதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, புதிய அரசியல் பயணத்திற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மட்டக்களப்பு, செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் நேற்றுமுன்தினம் (08) காலை கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட ஜனாதிபதி, மட்டக்களப்பு, செங்கலடி மத்திய கல்லூரிக்கருகில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பாரிய கட் அவுட்டை அகற்றுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் என்று அவரது ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் ரீதியாகக் கொண்டுள்ள நிலைப்பாடுகள் என்னவாக இருந்தாலும், பொதுவெளியில் சராசரி அரசியல்வாதிக்கப்பால் அவர் கொண்டுள்ள நிலைப்பாடுகள் வரவேற்கக்கூடியவையாக உள்ளன.கடந்த வாரம் ஜேர்மனிக்கு ரணில் சென்று அங்கு நிகழ்வொன்றில் கலந்துகொள்ள அறிவிப்பாளரால் வரவேற்கப்பட்டபோது மேன்மைதங்கிய என்ற வார்த்தைப்பிரயோகத்தைத் தெரிவித்தமைக்காக அந்த அறிவிப்பாளரை மென்மையாகக் கடிந்துகொண்டார் ஜனாதிபதி ரணில்.

பெருந்தன்மை அல்லது ஆடம்பரமற்ற தலைவர் என்ற நியாயங்களுக்கப்பால் தன்னை அரசியல் தொண்டர்கள் உசுப்பேற்றுவதை ரணில் விரும்பாமலிருப்பது இப்படியான உசுப்பேற்றல்களால் ஏற்கனவே சந்திரிகா,மஹிந்த,மைத்ரி,கோட்டாபய ஆகியோருக்கு நடந்த சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடும். ஆனால், ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டில் உள்ள நியாயத்தை அரசியல் எண்ணங்களுக்கப்பால் நின்று நோக்க வேண்டும்.

மட்டக்களப்பு நகரில் ஜனாதிபதி ரணிலின் கட் அவுட் வைக்கப்பட்டதை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் கூட அதற்குரிய செலவு , சுற்றாடல் மாசு, அதனை அமைக்க மாநகர சபை அனுமதி கொடுத்திருந்தாலும் அதனை அமைக்கும்போது இடம்பெறும் ஒழுங்குபடுத்தல்கள், அவ்வளவு பெரிய கட் அவுட்டை வைக்கும்போது அல்லது அகற்றும்போது ஏற்படும் போக்குவரத்து பாதிப்புகள் என்று பார்க்கும்போது அரசியல் தேவை ஒன்றுக்காக இவையெல்லாம் தேவைதானா என்ற கேள்வி மக்கள் மனதில் எழுவது இயற்கை.

அரசியல்வாதிகளைப் புகழ்வதும், அவர்களுக்காகத் தோரணம் கட்டுவதும் துதி பாடுவதும் நாட்டின் சாபக்கேடு தான். அரசியல்வாதி ஒருவருக்கு அமைக்கும் தோரணம், கட் அவுட் எவ்வளவு செலவில் அமைகிறதோ அந்தளவுக்கு அந்த அரசியல்வாதியின் மனதில் தொண்டர்கள் இடம்பெறுவார்கள் என்ற கருத்தோட்டம் இலங்கையில் உள்ளதை மறுக்க முடியாது.தேர்தல் காலங்களில் இது உச்சக்கட்டத்தில் இருக்கும். நாடு பொருளாதார வீழ்ச்சியை சந்தித்த காலகட்டங்களில் கூட இந்தப் புகழ்பாடல்களுக்கு எந்தக் குறைவும் ஏற்பட்டதில்லை.

அடுத்த வருடத்தை இலங்கையின் தேர்தல் வருடம் என்று கூறலாம். பெரும்பாலும் பாராளுமன்றத் தேர்தல் முதலில் வரக்கூடிய சாத்தியம் இருக்கிறது. எனவே, அப்படியான சூழ்நிலையில் ஜனாதிபதி ரணிலின் இவ்வாறான கருத்து இப்போது வெளிவந்திருப்பது வரவேற்கப்படக்கூடியது.வெறுமனே இதனை மேடைப்பேச்சுக்கு வரையறுத்துவிடாமல் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இது தொடர்பில் விஷேட சுற்றறிக்கையொன்றை ஜனாதிபதி ரணில் விடுத்தல் வேண்டும். கட் அவுட்கள் மாத்திரமல்ல, சுவரொட்டிகள் , அதிக சத்தத்துடன் சூழல் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துதல் உட்பட்ட விடயங்களுக்கும் கட்டுப்பாட்டை அரசாங்கம் விதித்தல் வேண்டும்.ஜனாதிபதியின் பேச்சு வெறும் வாய்ப்பேச்சாக இருந்துவிடக் கூடாது.

## இன்றைய நாளில்...

- 1846 – நெப்டியூனின் மிகப்பெரிய சந்திரன் டிரைட்டனை ஆங்கிலேய வானியலாளர் வில்லியம் இலாசல் கண்டுபிடித்தார்.
- 1911 – வூச்சாங் எழுச்சி ஆரம்பமாகியது. இது சிங் வம்சத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சீனக் குடியரசு உருவாவதற்கு வழிவகுத்தது.
- 1916 – வட இலங்கை அமெரிக்க மிஷன் தனது நூற்றாண்டு நிறைவை யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை குருமடத்தில் கொண்டாடியது.
- 1949 – விடுதலை பெற்ற இலங்கையின் புதிய இராணுவம் உருவாக்கப்பட்டது.
- 1987 – விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப் படையினருக்குமிடையில் யாழ்ப்பாணத்தில் போர் ஆரம்பமானது.
- 1991 – தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் மாவட்டம் உருவாக்கப்பட்டது.



# இஸ்ரேலில் அடுத்து என்ன நடக்கும்?

1973 இல் இஸ்ரேல் மீது எகிப்து மற்றும் சிரியா ஆகிய நாடுகள் திடீர் தாக்குதல் நடத்திய பின் சுமார் ஐம்பது ஆண்டுகள் கழித்து, பலஸ்தீன ஆயுதக் குழுவான ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது ஒரு பெரிய தாக்குதலை கடந்த சனிக்கிழமை நடத்தினர்.

ஹமாஸின் இந்தத் தாக்குதல் யாரும் எதிர்பார்க்காத நேரத்தில், யூதர்களின் விடுமுறை தினமான ஷபாத் அன்று நடந்தது.

1973 இல் நடந்த அந்தத் தாக்குதல் ஒக்டோபர் போர் என அழைக்கப்படுகிறது. அந்தப் போர் தான் அரபு மற்றும் இஸ்ரேல் தரப்புகளுக்கிடையே நடந்த முதல் போர் அல்லது யோம் கிப்பர் போர் என்று அறியப்படுகிறது.

இந்தச் சண்டையில் சிரியா கோலன் குன்றுகளிலிருந்து இஸ்ரேலைத் தாக்கியது. எகிப்து சூயஸ் கால்வாயிலிருந்து இஸ்ரேலைத் தாக்கி விரைவாக இஸ்ரேலுக்குள் நுழையத் தொடங்கியது.

இஸ்ரேல் அமெரிக்காவின் உதவியைக் கேட்டபோது, சோவியத் யூனியன் எகிப்து மற்றும் சிரியாவின் பக்கம் நின்றது. மேலும் போர் மிகத் தீவிரமாக நடைபெற்றது.

பல நாட்கள் நீடித்த இந்த மோதலுக்குப் பிறகு சினாய் மாகாணத்தில் இருந்து இஸ்ரேல் தனது இராணுவத்தை முற்றிலுமாக விலக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று.

சனிக்கிழமையன்று ஹமாஸ் இஸ்ரேலுக்கு எதிராக அல்-அக்ஸா ஸ்டோர்ம் என்ற பெயரில் தாக்குதலைத் தொடங்கியது. ஒருபுறம், ஹமாஸ் ஆயிரக்கணக்கான ரொக்கெட்டுகளை இஸ்ரேல் மீது ஏவியது. மறுபுறம், ஹமாஸ் போராளிகள் பல இடங்களில் இருந்து எல்லையைத் தாண்டி தரை வழியாக இஸ்ரேலுக்குள் நுழைந்தனர்.

இதுவரை கிடைத்துள்ள செய்திகளின்படி இத்தாக்குதலினால் இஸ்ரேலில் 1000 பேர் உயிரிழந்துள்ளதாகவும் படை அதிகாரிகள் உட்பட சுமார் 100 இஸ்ரேலியர்களை ஹமாஸ் பிணைக் கைதிகளாகப் பிடித்துள்ளதாகவும் நம்பப்படுகிறது. காஸா அதிகாரிகளின் கூற்றுப்படி, இஸ்ரேலின் பதிலடி நடவடிக்கையில் இதுவரை 370 பேர் உயிரிழந்துள்ளனர்.

### சனிக்கிழமை காலை தொடங்கிய திடீர் தாக்குதல்

சமீப காலங்களில் காசா பகுதியில் பதற்றம் அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால், பலஸ்தீன ஆயுதக் குழுவான ஹமாஸோ அல்லது காசா நிர்வாகத்தைக் கவனிக்கும் இஸ்லாமிய குழுக்களோ அல்லது இஸ்ரேலோ அதை அதிகரிக்க விரும்பவில்லை என்று மக்கள் நம்பினர்.

ஆனால், ஹமாஸ் இது தொடர்பாக மிகவும் சிக்கலான மற்றும் நன்கு திட்டமிடப்பட்ட ஒரு நடைமுறையை உருவாக்குவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தது. சனிக்கிழமை காலை இதைச் செய்து இஸ்ரேல் மீது ரொக்கெட் மழையை ஹமாஸ் குழுவினர் பொழிந்தனர்.

இஸ்ரேல் மீது 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரொக்கெட்டுகளை வீசியதாக அந்த அமைப்பு கூறியுள்ளது. சில ரொக்கெட்டுகள் ஜெருசலேம் மற்றும் டெல் அவிவ் வரை சென்றடைந்தன. மறுபுறம், பலஸ்தீனப் போராளிகள் தரை மற்றும் கடல் வழியாக தெற்கு இஸ்ரேலுக்குள் நுழைந்தனர்.

பல மணி நேரம் வரை இந்தப் போராளிகள் இஸ்ரேலிய நகரங்களையும் இராணுவ நிலைகளையும் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அவர்கள் இஸ்ரேலில் பலரைக் கொன்றுவிட்டு பொதுமக்களையும் இராணுவ வீரர்களையும் பணயக் கைதிகளாகப் பிடித்துக்கொண்டு காசா சென்றுவிட்டனர்.

சனிக்கிழமையன்று பகல் முழுவதும் ஹமாஸ் தாக்குதலின் படங்கள் மற்றும் வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பரவி முக்கிய ஊடகங்களில் நேரடியாக செய்திகளாக ஒளிபரப்பப்பட்டன.

காசா எல்லைக்கருகே இரவு விருந்துக்காக கூடியிருந்த ஆயிரக்கணக்கான இஸ்ரேலிய குடிமக்கள் திடீரெனத் தாக்குதலுக்கு உள்ளானதால் அதிர்ச்சியடைந்தனர்.

சமூக வலைத்தளங்களில் வெளியான வீடியோவில் நூற்றுக்கணக்கான மக்கள் திறந்தவெளியில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அங்கும் இங்கும் ஓடுவது தெரிந்தது. தற்போதைய தாக்குதலின் தொடர்ச்சியாக அடுத்து என்ன நடக்கும் என்ற பெரிய கேள்வி எழுந்துள்ளது.

ஆயுதம் தாங்கிய போராளிகளிடமிருந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மரங்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டதாகவும் அவரது தோழர்கள் தன்னைத் தேடி வந்ததாகவும் கிலி யோஸ்கோவிச் என்பவர் பி.பி.சியிடம் கூறினார்.

“அவர்கள் ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்கு நகர்ந்து துப்பாக்கிகள் மூலம் சுடுகிறார்கள். இருபுறமும் அவர்கள் குண்டுகளை வீசினர். எல்லா இடங்களிலும் சடலங்கள் கிடந்ததை நான் கண்டேன்” என்று அவர் கூறினார்.

“பரவாயில்லை, நான் சாகப் போகிறேன். மூச்சை வெளியில் விட்டுக் கண்களை மூடிக்கொள்” என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். அவர்கள் எல்லா இடங்களிலும் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எனக்கு மிகவும் நெருக்கமாக இருந்தனர்”

இஸ்ரேலின் ஹயோம் செய்தி நிறுவனம் கிபுட்ஸ் பெர்ரியில் வசிக்கும் எல்லா என்ற பெண்ணிடம் பேசியது. ரொக்கெட் தாக்குதல் சைரன் ஒலித்த போது தனது தந்தை பாதுகாப்பான இடத்தில் தஞ்சமடைந்ததாக எல்லா கூறுகிறார்.

அவர் கூறியபோது, “தாக்குதல்தாரிகள் தங்குமிடத்திற்குள் நுழைந்ததாக அவர்கள் எனக்கு ஒரு செய்தியை அனுப்பினார்கள். அவர்களின் படங்களை டெலிகிராமில் பார்த்தேன். அவை காசாவில் எடுக்கப்பட்டவை. எனக்கு இன்னும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கிறது” - என்றார்.

### காசாவில் ஆரம்ப எதிர்வினை என்ன?

இச்சம்பவத்திற்கு இஸ்ரேல் பாதுகாப்புப் படை எதிர்பார்த்தது போல் விரைவாகப் பதிலடி கொடுக்கவில்லை என பல இஸ்ரேலியர்கள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர். மக்களுக்கு உதவ இராணுவம் விரைவாக வரவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையில், ஹமாஸ் தொலைக்காட்சியில் வெளியான காட்சிகளில் பலஸ்தீனப் போராளிகள் இஸ்ரேலிய இராணுவ நிலைகள் மற்றும் டாங்கிகளைக் கைப்பற்றிய காட்சிகளும் அவர்கள் இஸ்ரேலிய வீரர்களைக் கொல்லும் காட்சிகளும் இடம்பெற்றிருந்தன.

காசாவில் இருந்து கிடைத்த முதற்கட்டப் படங்களில் தாக்குதலுக்குப் பிறகு மக்கள் கொண்டாடும் காட்சிகளும் பலஸ்தீனப் போராளிகள் இஸ்ரேலிய இராணுவ வாகனங்களைச் சூறையாடி அதில் சுற்றித் திரியும் காட்சிகளும் இருக்கின்றன.

காசா நகரத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பி.பி.சியிடம் பேசியபோது, “ஹமாஸ் குழுவினரின் தாக்குதல் நடவடிக்கை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அல்-அக்ஸாவில் இஸ்ரேலின் செயல்களுக்குப் பதிலடியாக ஹமாஸ் பழிவாங்கியுள்ளது” - என்று கூறினார்.

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள கிழக்கு ஜெருசலேமை ஒட்டிய அல்-அக்ஸா மசூதியின் வளாகத்தையே இந்த இளைஞர்கள் குறிப்பிடுகின்றனர். அங்கு சமீப காலமாக யூதர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அல்-அக்ஸா மசூதி இஸ்லாத்தின் மூன்றாவது புனிதமான இடமாகக் கருதப்படுகிறது. அதேசமயம், யூதர்களும் தங்கள் புனிதமான இடமாகக் கருதுகின்றனர். அவர்கள் அதை ‘டெம்பிள் மவுண்ட்’ என்று அழைக்கிறார்கள்.

காசாவில் உள்ள நிர்வாகம் அருகிலுள்ள பகுதியை இஸ்ரேல் தாக்கக்கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது. இருப்பினும், இந்த இளைஞர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வருவதை வழக்கமாகக்கொண்டுள்ளனர்.

அந்த இளைஞர்கள் தொடர்ந்து பேசிய போது, “எங்கள் எதிர்காலம் குறித்து நாங்கள் கவலைப்படுகிறோம். 2021 இல் இஸ்ரேலில் ஷோரூக் டவர் தாக்கப்பட்டது. அப்போது எனது குடும்பத்துக்குச் சொந்தமான கடை அழிக்கப்பட்டது. இந்த முறை ஹமாஸின் தாக்குதல் முன்பை விட பெரிய நடவடிக்கை. எனவே, இஸ்ரேலின் பதிலடியை எதிர்பார்க்கலாம். அதுவும் பெரிதாக இருக்கும் என்றே நினைக்கிறேன்” - என்று கூறினார்.

பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல்கள் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்தத் தாக்குதல்களின் விளைவாக பலஸ்தீனத்தில் மருத்துவமனைகளில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

தோராயமாக 2.3 மில்லியன் பலஸ்தீன குடிமக்கள் வசிக்கும் காசா பகுதி 2007 இல் ஹமாஸ் அமைப்பால் கைப்பற்றப்பட்டது. இதற்கு ஓராண்டுக்கு முன் இங்கு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஹமாஸ் அமைப்பு தான் வெற்றி பெற்றது.

அந்த நேரத்தில், இஸ்ரேலும் எகிப்தும் இந்தப் பகுதியின் எல்லையில் முற்றுகையை இறுக்கியிருந்தன. இப்பகுதியில் வேலையில்லமல் திண்டாடியோரின் எண்ணிக்கை விகிதம் 50 சதவீதமாக இருந்தது.

2021 ஆம் ஆண்டில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்குமிடையிலான பதற்றங்கள் அதிகரித்தன. அதன் பிறகு எகிப்து, கட்டார் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை நடத்திய மத்தியஸ்தத்துக்குப் பின் இருதரப்புகளுக்குமிடையே ஒரு ஒப்பந்தம் நிறைவேறியது. காஸாவில் வசிக்கும் மக்கள் இஸ்ரேலில் பணிபுரிய அனுமதியளிக்கப்படுமென்றும் சில கட்டுப்பாடுகள் நீக்கப்படுமென்றும் அதற்குப் பதிலாக ஹமாஸ் எல்லையில் அமைதியாக இருக்க வேண்டுமென்றும் இருதரப்புகளும் ஒப்புக்கொண்டன.

### அடுத்து என்ன நடக்கும்?

கடந்த மாதம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பைப் போல் நூற்றுக்கணக்கான வேலிகளால் ஆன எல்லைக்கருகில் பலஸ்தீனர்கள் கூடத்தொடங்கிய போது ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலிடம் இருந்து கூடுதல் சலுகைகளை விரும்புவதாகவும் கட்டார் தனது உதவித் தொகையை அதிகரிக்க வேண்டுகோள் விடுக்கப்போவதாகவும் நம்பப்பட்டது.

ஆனால், இந்தச் சிறிய அளவிலான கூட்டங்கள் இப்போது எச்சரிக்கை மணி அடிப்பதைப் போல் தெரிகிறது. சிலர் இது வேலியின் கணக்கெடுப்பு அல்ல, இதனால் எங்கிருந்து வேலியை உடைக்க முடியும் என்பதைக் கண்டறிய முடியும் என்று கூறுகிறார்கள். ஒருசிலர் அந்த வேலியைக் கடந்து வருவதற்கான முயற்சிகளை அந்தக் குழுவினர் மேற்கொண்டதாகவும் கருதினர்.

ஹமாஸ் அமைப்பின் சமீபத்திய பிரசாரத்தின் மூலம் மீண்டும் ஒரு கிளர்ச்சி நடத்தி இஸ்ரேலை அழிப்பதே அதன் முக்கிய நோக்கம் என்று அதன் பிம்பத்தை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறது.

சனிக்கிழமையன்று அல்-அக்ஸா ஸ்டார்ம் தாக்குதலின் தொடக்கத்தில், ஹமாஸ் இராணுவத் தளபதி முகமது டெய்ஃப், ‘‘பலஸ்தீனர்கள் மற்றும் பிற அரபு சமூகங்கள் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கான இந்தப் போருக்கு உதவ வேண்டும்” - என வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால், மேற்குக் கரையோ, கிழக்கு ஜெருசலேமோ அல்லது வேறு எந்தப் பகுதியோ ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் பலஸ்தீனர்கள் ஹமாஸின் இந்த வேண்டுகோளுக்கு செவிசாய்ப்பார்களா என்பது பெரிய கேள்வியாக இருக்கிறது.

தற்போதைய தாக்குதலில் 1973ஆம் ஆண்டைப் போல பல முனைகளில் போரிடக்கூடிய ஒரு போரின் சாத்தியத்தை இஸ்ரேல் காண்கிறது என்பதில் சந்தேகமில்லை.

லெபனானில் இருந்து செயற்படும் சக்திவாய்ந்த ஹிஸ்புல்லா இயக்கம் இந்தத் தாக்குதலுக்குள் நுழைய வாய்ப்புள்ளது. அப்படி நடந்தால் தற்போதைய தாக்குதல் நிலைமை கட்டுப்பாட்டை மீறும்.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் ஹமாஸ் தாக்குதலுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா ஆதரவாளர்கள் சனிக்கிழமையன்று பேரணி நடத்தினர்.

ஞாயிற்றுக்கிழமை ஹமாஸ் குழுவினருடனான சண்டையின் போது ஹிஸ்புல்லா தலையிடக் கூடாது என்று இஸ்ரேல் கூறியது. ஹிஸ்புல்லா ஒரு ஷியா இஸ்லாமிய அரசியல், இராணுவம் மற்றும் சமூக அமைப்பாகும். இது லெபனானில் அதிக செல்வாக்கைக் கொண்டுள்ளது என்பதுடன் ஹமாஸைப் போலவே ஈரானின் ஆதரவையும் பெற்றுள்ளது.

இதற்கிடையில் இஸ்ரேல் பெரிய அளவில் இராணுவ வீரர்களை அணி திரட்டும் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது. இஸ்ரேல் காஸா மீது பதிலடித் தாக்குதல்களைத் தொடங்கியுள்ளதுடன், அங்கு தரைப்படைத் தாக்குதல் நடவடிக்கையையும் திட்டமிட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால், ஹமாஸ் அமைப்பு தற்போதைய தாக்குதலின்போது ஏராளமான இஸ்ரேலிய வீரர்கள் மற்றும் பொதுமக்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளது. அவர்களை அவர்கள் மனித கேடயங்களாகவோ அல்லது பேரம் பேசவோ பயன்படுத்தலாம். இந்தப் பிரச்சினை அங்குள்ள நிலைமையை மேலும் சிக்கலாக்குகிறது.

இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் செய்தித் தொடர்பாளர் ரியர் அட்மிரல் டேனியல் ஹகாரி கூறுகையில்,

“நாங்கள் தற்போது அப்பகுதியின் கட்டுப்பாட்டை மீட்டெடுக்க முயற்சித்து வருகிறோம். நாங்கள் பரந்த அளவிலான தாக்குதலை நடத்தி வருகிறோம். குறிப்பாக, காசா பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளைக் கட்டுப்படுத்துவதில் மும்முரமாக இருக்கிறோம். அதை முழுமையாக மதிப்பாய்வு செய்வோம்” - எனத் தெரிவித்தார்.

அதற்கு சிறிது காலம் பிடிக்கலாம். ஆனால், ஹமாஸ் அமைப்பு எப்படி இவ்வளவு பெரிய தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டது, ஏன் இவ்வளவு ஆக்ரோஷமாக இருந்தது என்று இஸ்ரேலிய உளவுத்துறை அமைப்புகளும் பாதுகாப்பு அமைப்புகளும் தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்களால் பெரிய அழிவைத் தடுக்க முடியவில்லை.

நன்றி - பி.பி.சி.தமிழ்



# தேன் எடுக்க வனப் பகுதிக்குச் சென்ற இளைஞன் வழுக்கி விழுந்து உயிரிழப்பு

ராமு தனராஜா

மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதொவ கீழ்ப்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரொருவர் மேலும் இருவருடன் தமது ஊரிலிருந்து 2 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள வனப் பகுதியில் தேன் எடுப்பதற்காக நேற்று முன்தினம் மாலை சென்றுள்ளார்.

கற்பாறை பகுதியிலிருந்த தேனை எடுப்பதற்காக மரத்தில் கயிற்றைக் கட்டி இளைஞர் ஒருவர் இறங்கியுள்ளார்.

அவர் முதலாவது தேன் ராட்டை வெட்டிப் போடும்போது அதனை வாளியில் சேகரிக்க கீழ்ப்பகுதியில் மற்றுமொருவர் இருந்துள்ளார்.

இதன்போது தேன் பாறையிலும் ஒழுகியுள்ளது. பின்னர் இரண்டாவது ராட்டையும் வெட்டிப் போட்ட பின்னர், அதனை சேகரிப்பதற்காக கீழ்ப் பகுதியில் இருந்தவர் முற்படுகையில் ஒழுகிய தேனில் கால் வைத்து வழுக்கி விழுந்ததில் அவர் உயிரிழந்துள்ளார். சுமார் 100 அடி பள்ளத்தில் அவர் விழுந்தார் என அவருடன் சென்றவர்கள் தெரிவித்தனர். பின்னர் ஓட்டோவில் பசறை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார். அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் வரும் வழியிலேயே உயிரிழந்துவிட்டார் எனக் கூறியுள்ளனர். சடலம் பசறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மடுல்சீமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாதுகாப்பற்ற வனங்களில் 3,32,000 ஏக்கர் கோடீஸ்வர வர்த்தகர்களுக்கு வழங்கல்

## பாரிய சுற்றுச்சூழல் பிரச்சினை உருவாகும் சாத்தியம்

பாதுகாப்பற்ற வனங்களில் 3,32,000 ஏக்கர் நிலங்கள் கோடீஸ்வர வர்த்தகர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள், உயரதிகாரிகளுக்கு விவசாயம், ஏனைய நடவடிக்கைகளுக்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரியவந்துள்ளதாக சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு வனப் பகுதிகள் பல்வேறு தேவைகளுக்காக வழங்கப்படுவதால் அது சுற்றுச்சூழலுக்குப் பாரிய அச்சுறுத்தலாக அமையுமென அதன் தலைவர் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்தார்

அத்தோடு 2018ஆம் ஆண்டுமுதல் 2022 ஆம் ஆண்டு வரை யானை - மனித மோதலால் 1967 யானைகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் யானை தாக்குதலில் 667 மனிதர்கள் உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகிறது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக 12 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் இவ்வருடம் 273 யானைகள் கொல்லப்பட்டுள்ளன.

சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான பாராளுமன்ற மேற்பார்வைக் குழு, அதன் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அஜித் மான்னப்பெரும தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியது.

அந்த கூட்டத்திலேயே மேற்படி தகவல் தெரியவந்துள்ளது.

இந்தக் குழுக் கூட்டத்தில் சுற்றுச்சூழல் தொடர்பான பல அமைப்புகளும் கலந்து கொண்டன. அவர்களும் பல கருத்துகளைத் தெரிவித்தனர்.

யானைகளின் உடலில் கண்டெடுக்கப்பட்ட தோட்டாக்கள் தொடர்பில் பரிசோதனை செய்ததில் அதில் அறுபது வீதமான தோட்டாக்கள் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமானதென உஸ்ம அமைப்பின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

ஹக்கா பட்டாஸ், சட்டவிரோத மின்சாரம் வேலிகள் போன்ற காரணங்களால் யானைகள் உயிரிழப்பது தொடர்பாக எந்தச் சட்டமும் அமுல்படுத்தப்படவில்லை என சுற்றுச்சூழல் அமைப்புகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பான சட்டவரைவை தயாரிக்குமாறும் தலைவர் அஜித் மான்னப்பெரும அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

கலாவெவ பாதுகாக்கப்பட்ட வனமாக இதுவரை வர்த்தமானி வெளியிடப்படவில்லை என சுற்றாடல் துறை பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். வர்த்தமானியை வெளியிட எவ்வளவு முயற்சி செய்தாலும் அது கிடப்பில் போடப்படுவதாக குறிப்பிட்டுள்ளனர்.

யானைகள் அதிகம் உயிரிழக்கும் பிரதேசமாக கலாவெவ வனம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

# புகை பரிசோதனையிலிருந்து விலகத் தீர்மானம்

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவிப்பு

புகை பரிசோதனை நடைமுறையில் முறையான செயற்றிடங்கள் இன்மையால் புகை பரிசோதனை செய்வதிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

2024 ஜனவரி முதல் இந்தத் தீர்மானம் நடைமுறைப்படுத்தவுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டார்.

இது தொடர்பில் போக்குவரத்துச் சபை அதிகாரிகளுக்கு எழுத்துமூலம் அறிவிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், பஸ்களுக்கு வழங்கப்படும் எரிபொருளின் தரத்தில் பாரிய பிரச்சினை காணப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாதசாரிக் கடவை விபத்தில் ஆசிரியை மரணம்

## தப்பிச்சென்ற சாரதி கைது!

கெஸ்பேவ, கல்பிட்ட பகுதியில் பாதசாரிக் கடவையில் பாலர் பாடசாலை ஆசிரியரை மோதி மரணமடையச் செய்து தப்பிச்சென்ற வர்த்தகர் கைதுசெய்யப்பட்டுள்ளாரென கெஸ்பேவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து நடந்த கடந்த 05ஆம் திகதி அருகில் இருந்த நபர் ஒருவர் வாகனம் பதிவு செய்யப்பட்ட இலக்கத்தை ஒரு கடதாசியில் எழுதி அங்கிருந்த வர்த்தக நிலையத்தில் ஒப்படைத்துச் சென்றுள்ளார். அந்த இலக்கத்தைக்கொண்டு மேற்கொண்ட பரிசோதனையில் எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் உள்ள வாகனம் என கணடறியப்பட்டுள்ளது.

ஆனால், அந்த வாகனத்தின் உரிமையாளர், அதை வாடகைக்கு வழங்கியுள்ளமை தெரியவந்துள்ளதையடுத்து அதை வாடகைக்கு எடுத்த வர்த்தகர் தன்னால்தான் விபத்து இடம்பெற்றதாக பொலிஸாரிடம் ஒப்புக்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (09.10.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 200.8745 | 211.3907 |
| கனேடியன் டொலர் | 231.7462 | 242.6323 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.8409 | 45.7153 |
| யூரோ | 334.6182 | 349.4789 |
| ஜப்பான் யென் | 2.1262 | 2.2188 |
| சிங்கப்பூர் டொலர் | 231.6609 | 242.2874 |
| ஸ்ரேலிங் பவுன் | 387.8322 | 403.4620 |
| சுவிஸ் பிராங்க் | 346.9911 | 364.7894 |
| ஐ.அ. டொலர் | 318.3050 | 328.9350 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 859.2982 |
| குவைட் | குவைட் தினார் | 1,046.1021 |
| ஓமான் | ஓமான் றியால் | 840.5826 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.7580 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.2792 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.1032 |

# மீன் முள் குத்தியதில் கடற்படை வீரர் மரணம்

கடற்படை வீரர் ஒருவர் மீன் முள் குத்தியதில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீகஸ்வெவ, போபீயாவெவ கிராமத்தைச் சேர்ந்த கடற்படை வீரரே உயிரிழந்தவராவார். விடுமுறையில் வீட்டுக்கு வந்தவர், நண்பருடன் எழபட்டுவெவ என்ற குளத்தில் நீராடச் சென்றபோது குளத்தில் முள்ளுடன் கூடிய விறால் மீனை கடற்படை வீரர் மிதித்துள்ளார்.

அவர் மிதித்த மீனின் முள் விஷத்தால் ஏற்பட்ட கடுமையான வலி காரணமாக அவர் அம்பியூலன்ஸ் மூலம் மெதிரிகிரிய வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 38 வயது, இரண்டு பிள்ளைகளின் தந்தை என பொலிஸார் கூறியுள்ளனர்.

மேலும் கடற்படை வீரரின் சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனைகளுக்காக பொலன்னறுவை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

# இரத்தோட்டை இந்து மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணம்

இரத்தோட்டை இந்து மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி காலை 10 மணிக்கு பாடசாலை அதிபர் எம்.சந்திராதேவி தலைமையில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் இரத்தோட்டை இந்து மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் எம்.சந்திராதேவி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



உடப்பு ஆண்டிமுனை ஸ்ரீ கன்னியம்மன் ஆலய வருடாந்த கணபதிப் பூஜை வெள்ளிக்கிழமையும் வருஷாபிஷேகம், சங்காபிஷேகம் ஆகியன சனிக்கிழமையும் (7) மிகவும் சிறப்பாக நடைபெற்றன.
(படம் : உடப்பு நிருபர்)

# இலங்கையில் நீதி மரணித்துவிட்டதாகவே உணரமுடிகின்றது

## முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன்

விஜயரத்தினம் சரவணன்

இலங்கையில் தற்போது நீதி மரணித்து விட்டதாகவே உணரமுடிவதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் போதைப்பொருட்கள் பல்கிப்பெருகியுள்ளதுடன், சட்டவிரோத செயற்பாடுகளும் அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில், நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு, அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு இந்த நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ள நிலைமை இந்த நாட்டில் நீதி மரணித்ததற்கு ஒப்பானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்னால் நேற்று (09) நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கோரி கொழும்பில் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ்வாறு கவனயீர்ப்பு நடவடிக்கைக்கென முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்கள் அழைப்பு விடுத்திருந்த நிலையில், புலனாய்வாளர்கள் பல வீடுகளுக்குச் சென்று அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

அவ்வாறு புலனாய்வாளர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால், பல இளைஞர்கள் குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் இணைந்துகொள்ளவில்லை.

இருப்பினும், கணிசமான இளைஞர்கள் முகத்தில் கறுப்புத்துணி கட்டி, கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், அதனைத் தொடர்ந்து, மேலதிக மாவட்ட செயலரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

# தெஹிவளையில் ஆறு வாள்களுடன் நால்வர் கைது

திட்டமிட்ட குற்றச்செயல் கும்பல் தலைவரின் சகபாடியை கைதுசெய்து அவர் வசித்துவந்த தெஹிவளை தர்மபாலராம வீதியிலுள்ள வீடொன்றை சோதனை செய்ததில் நான்கு பேர் கூரிய ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களுடன் ஆறு வாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் அதிரடிப்படையின் களுபோவில முகாமினர் தெஹிவளை தர்மபாலராம வீதியை மறித்து சோதனை செய்ததில் 20 மில்லிகிராம் போதைப்பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதன் பின்னர் அந்நபர் வசித்துவந்த வீட்டை பரிசோதனை செய்ததில் வீட்டில் தங்கியிருந்த நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் குறித்த வீட்டில் ஆறு வாள்கள் காணப்பட்டதாகவும் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# உயர்தரப் பரீட்சையில் உச்ச பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கு மக்கள் வங்கியால் மடிகணினி



2022ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அனைத்து பாட பிரிவுகளிலும் உச்ச பெறுபேறுகளைப் பெற்ற மிகச்சிறந்த மாணவர்களின் சாதனைகளைப் படைத்த ஒவ்வொருவருக்கும் மக்கள் வங்கி புத்தம் புதிய மடிகணினியை வழங்கியது.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி, பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோரின் தலைமையில் கொழும்பு 05இல் உள்ள மக்கள் வங்கி பணியாளர்கள் பயிற்சிக் கல்லூரியில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

உயிரியலில் முதலாம் இடத்தைப் பெற்ற மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தைச் சேர்ந்த பிரமுதி பாஷினி முனசிங்க. பௌதீக விஞ்ஞானப் பிரிவில் முதலிடத்தைப் பெற்ற கொழும்பு றோயல் கல்லூரியைச் சேர்ந்த மனேத் பானுலா, வர்த்தகப் பிரிவுக்கு கொழும்பு, சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தைச் சேர்ந்த தில்சரணி தருஷிகா, கலைப் பிரிவில் அகில இலங்கையில் முதலிடம் பெற்ற கேகாலை புனித சூசையப்பர் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சசினி சத்சரணி அத்தபத்து, பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் உச்ச பெறுபேற்றைப் பெற்ற காலி ரிச்மண்ட் கல்லூரியைச் சேர்ந்த சமுதித நயனப்ரிய மற்றும் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியலில் முதல் இடத்தைப் பெற்ற கொழும்பு தேவிபாலிகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ருச்சினி அஹின்சா விக்ரமரத்ன ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இவ்விழாவில் உரையாற்றிய மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, இந்த அசாத்தியமான திறமைசாலிகளை அங்கீகரித்து அவர்களுக்கு வெகுமதி வழங்கும் பாக்கியத்தை மக்கள் வங்கி பெற்றிருப்பதில் பெருமையடைகிறது. இந்த முயற்சி நமது தேசத்தின் எதிர்காலத் தலைவர்களை வளர்ப்பதற்கும், ஆதரவளிப்பதற்கும் எமது உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது என்று குறிப்பிட்டதுடன், மாணவர்களின் சிறப்பான திறமைகளை எதிர்காலத்தில் நாட்டுக்கு சேவை செய்ய பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் பிரதி பொது முகாமையாளர் (வங்கி ஆதரவு சேவைகள்) நிபுனிகா விஜயரத்ன ரி.எம்.டபிள்யூ. சந்திரகுமார, பிரதி பொது முகாமையாளர் (வழங்கல் முகாமைத்துவம்), சந்தைப்படுத்தல் தலைவர் நாலக விஜயவர்தன, மக்கள் வங்கியின் பிரதி பொது முகாமையாளர் (தனிநபர் வங்கிச்சேவை) நளின் பத்திரனகே மற்றும் பாடசாலை அதிபர்கள், மக்கள் வங்கியின் நிறைவேற்று முகாமைத்துவ அதிகாரிகள், பிராந்திய முகாமையாளர்கள், வங்கி முகாமையாளர்கள், மற்றும் பெற்றோர் உட்பட பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2023.10.08
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 5261
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 31,641,632.00
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 5 9 2 0 1 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம்: 3503
சீட்டிழுப்பு திகதி: 08.10.2023
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 63,290,435.20
ஆங்கில எழுத்து: O
வெற்றி இலக்கங்கள்: 04 21 32 58
விசேட எழுத்து: O
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம்: 59986

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம்: 1609
2023.10.08
69488
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 409,855,200.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: G
சுப்பர் இலக்கம்: 11
வெற்றி இலக்கங்கள்: 27 38 60 77

ஷ்ரீ Lucky 7 லக்கி
திகதி: 08.10.2023
சீட்டிழுப்பு இலக்கம்: 0087
வெற்றி இலக்கினம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 8 5 7 3 2 6
L7 இலக்கம்: 2 5
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு: ரூ. 11,498,532.96

ராசி சுப பலன்
திகதி: 08.10.2023
சீட்டிழுப்பு இலக்கம்: 570
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு: ரூ. 3,200,106.80
வெற்றி இலக்கினம்: கடகம்
வெற்றி இலக்கங்கள்: 09 27 48 60
விசேட இலக்கினம்: கடகம்

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 1291
08.10.2023
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 114,285,240.80
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 23 27 57 75
விசேட எழுத்து: G
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம்: 23426

# அரசில் இருக்கின்றீர்களா? எதிர்க்கட்சியில் இருக்கின்றீர்களா?

## மக்கள் எழுப்பும் கேள்வி இது என்கிறார் வடிவேல் சுரேஷ்



"தொழிற்சங்க நடவடிக்கைகளிலோ அரசியல் வேலைத்திட்டங்களிலோ எந்த வேலைத்திட்டங்களுக்குச் சென்றாலும் எல்லோரும் என்னிடம் கேட்கும் கேள்வி நீங்கள் அரசாங்கத்துடன் இருக்கின்றீர்களா? எதிர்க்கட்சியுடன் இருக்கிறீர்களா? - என்பதுதான். நான் சுயாதீனமாக பாராளுமன்றத்தில் இருக்கின்றேன்" - என்கிறார் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ்.

பசறை 7ஆம் கட்டை ஊவா முகாமைத்துவ மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் தோட்டத் தலைவர்களுக்கிடையில் இடம்பெற்ற கருத்தரங்கின்போது விஷேட அதிதியாகக் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த காலத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மடுல்சீமை பகுதியில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்துக்கு வருகை தருவதாகவும் மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயத்துக்கும் லுணுகலை/ஹொப்டன் தமிழ் வித்தியாலயத்துக்கும் பாடசாலை பஸ்கள் தருவதாகவும் கூறியிருந்தார். அன்றைய தினம் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் மிகவும் எதிர்பார்ப்போடும் - ஆவலாகவும் மடுல்சீமை நகருக்கு வருகை தந்திருந்தனர்.

இருப்பினும், எதிர்க்கட்சித் தலைவர் திடீர் சுகயீனமுற்றதாகவும் மடுல்சீமை பொதுக் கூட்டத்துக்கு வரமுடியாது எனக் கூறிவிட்டும் சென்றுவிட்டார். இதனையடுத்து அனைவரும் ஏமாற்றமடைந்தனர்.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் வேறு இடங்களில் இடம்பெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டுள்ளார். அதற்கான மன்னிப்பையும் அவர் கோரவில்லை.

அஸ்வெசும வேலைத்திட்டம் தோட்டத் தொழிலாளர்களுக்கு 100 வீதம் கிடைக்கா விட்டாலும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தமையால் தற்போது ஓரளவேனும் கிடைத்துள்ளது. சமுர்த்திக் கொடுப்பனவுகள் கூட இவ்வாறு கிடைக்கவில்லை. இருந்த போதிலும், கடந்த 3 வருடங்களாக ஏற்பட்ட கொரோனா தொற்றின் காரணமாக பொருளாதாரப் பிரச்சினைகள் காணப்பட்ட காலத்தில் நாம் அனைவரும் இணைந்து நாட்டை மீட்டெடுக்க ஓரணியில் ஒன்றாக இணைந்து வேலை செய்தோம்.

கட்சி மாறியது வேறொரு கட்சித் தலைவருக்கு துரோகம் இழைப்பதற்காக என்ற அர்த்தம் கிடையாது. எனக்கு கட்சி, சின்னம் பிரச்சினை இல்லை. இந்த நாட்களில் தோட்டப்புறங்களில் பாரியளவு பிரச்சினைகள் முளைகட்டி காணப்படுகின்றன.

இவைகுறித்து ஜனாதிபதியிடம் கதைத்து பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணவேண்டும். எனவே, எனக்கு சேறு பூச யாரும் முன்வர வேண்டாம்.

எனது மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க நாட்டிலிருக்கும் தலைவருடன் நான் ஒன்றிணைந்து செயற்படுவதே எனது கடமை. அதையே நான் செய்தும் வருகின்றேன்; தொடர்ந்தும் செய்வேன். தமிழ், சிங்கள, முஸ்லிம் அனைத்து மக்களுக்கும் கடந்த 24 வருடங்களாக ஒன்றிணைந்து கடமையாற்றுகின்றேன் – இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் மேலும் தெரிவித்தார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மக்கள் ஆதரவற்ற சட்டவிரோத அரசுக்கே ஜனாதிபதி தலைமை தாங்குகின்றார்

## இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

நுவரெலியா நிருபர்



இன்று இந்த நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அனைத்து திட்டங்களும் மொட்டுக் கட்சியின் தவறான திட்டங்களேயாகும். தற்போதைய இந்த அரசுக்கு மக்கள் ஆதரவு கிடையாது. அடுத்த தேர்தலில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றால் மொட்டுக் கட்சியின் கொள்கையே தொடர்ந்தும் செயற்படுத்தப்படும். இதையடுத்து நாடு இதைவிட மிகவும் மோசமான நிலைமைக்கு சென்றுவிடும். எனவே, ஜனாதிபதித் தேர்தலில் சஜித் வெற்றிபெற்றால் மாத்திரமே இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் விடிவு காலம் ஏற்படும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் மக்கள் சந்திப்பு கூட்டமொன்று நேற்று முன்தினம் (08) மஸ்கெலியா லக்சபான பகுதியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் அனைவரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

அவர்கள் முன்னிலையில் தொடர்ந்து உரையாற்றிய இராதாகிருஷ்ணன்,

எங்களுடைய கட்சியின் கொள்கையை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை ஏற்றுக் கொள்ள முடியும் என்று மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிடுகின்றார்.

அப்படியானால் இப்பொழுது நடைமுறையில் இருக்கின்ற இதே கொள்கையையே தொடர வேண்டும் என்பதையே அவர் சொல்லாமல் சொல்கிறார். அதாவது, ஜனாதிபதி மொட்டுக் கட்சியின் பிடியில் இருப்பதும் அவர்களுக்குத் தேவையான வகையில் அரசாங்கத்தைக் கொண்டு செல்வதுமே ஜனாதிபதியின் செயற்பாடு.

அடுத்த தேர்தலில் ஜனாதிபதியாக ரணில் வெற்றிபெற்றால் தற்போது உள்ளதை விட மிகவும் மோசமான பொருளாதாரக் கொள்கையே நடைமுறைப்படுத்தப்படும். நாடு மேலும் மிக மோசமாக படுபாதாளத்தை நோக்கிப் பயணிக்கும்.

எனவே, இந்த நாட்டில் மாற்றம் ஏற்பட வேண்டுமானால் நிச்சயமாக ஜனாதிபதியாக சஜித் பிரேமதாச வெற்றிபெற வேண்டும். அப்படி நடந்தால் மாத்திரமே மாற்றம் ஏற்படும்.

இன்று சர்வதேச சமூகம் நமக்கு உதவிகளை வழங்க சிந்திக்கின்றது. நாட்டில் ஜனநாயகம் இல்லை முறையான பொருளாதாரக் கொள்கை இல்லை அரச செலவினங்கள் கட்டுப்படுத்தப்படவில்லை.இப்படி பல குறைபாடுகள் இருக்கின்ற ஒரு நாடாகவே இந்த நாடு இருக்கின்றது.

ஒரு ஜனநாயகத் தேர்தல் நடைபெற்று புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமாக இருந்தால் மாத்திரமே இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். அது தவிர, வேறு எந்தவிதமான மாற்று நடவடிக்கையும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சப்ரகமுவ மாகாண ஊடகவியலாளர்களுக்கு இலவச பயணச் சீட்டு வழங்கிவைப்பு

இரத்தினபுரி நிருபர்

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு இலவச பயணச் சீட்டு வழங்கும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தலைமையில் இரத்தினபுரியில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (06) இடம்பெற்றது.

மேற்படி வழங்கப்பட்ட இலவச பயணச் சீட்டில் சப்ரகமுவ மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் கீழ் உள்ள தனியார் பஸ்களில் இலவசப் பயணங்களை மேற்கொள்ள முடியும்.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, ஆளுநரின் ஊடக செயலாளர் அசித் ஜயசிங்க, சப்ரகமுவ மாகாண வீதிப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் ரம்ய குமார வீரசிங்க, அதன் பொது முகாமையாளர் தமித் பிரியந்த பட்டவல, இரத்தினபுரி மாவட்ட முகாமையாளர் நிமல் அபேரத்ன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## வெள்ளைச் சீனியை சிவப்புச் சீனியாக மாற்றும் கலப்பட தொழிற்சாலை சீல்வைப்பு

ஏ.ஏ.எம்.பாயிஸ்

வெள்ளைச் சீனியை சிவப்புச் சீனியாக மாற்றும் சட்டவிரோத தொழிற்சாலையொன்றை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர். இப்பிரதேச மக்கள் பொது சுகாதார காரியாலயத்துக்கு வழங்கிய எழுத்துமூல முறைப்பாட்டுக்கிணங்க இறக்குவானை, தெனியாய ஹேன்பட் பகுதியில் அமைந்துள்ள இத்தொழிற்சாலையை அதிகாரிகள் முற்றுகையிட்டுள்ளனர்.

மனித பாவனைக்கு பாதகத்தை ஏற்படுத்தும் வகையிலும் சுகாதாரத்துக்குக் கேடான விதத்திலும் இங்கு வெள்ளைச் சீனியுடன் இரசாயனக் கலவைகள் கலக்கப்பட்டு சிவப்புச் சீனியை உற்பத்தி செய்து அவை குறைந்த விலையில் சந்தைக்கு விநியோகிக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் இங்கு அமைக்கப்பட்டுள்ள களஞ்சியசாலையொன்றிலிருந்து 2000 கிலோ சீனியும் அதற்குப் பயன்படுத்தப்பட்ட பல உபகரணங்களும் கைப்பற்றப்பட்டதாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்போது இத்தொழிற்சாலைக்கு சீல் வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மழை வெள்ளத்தால் 945 பேர் பாதிப்பு

ஏ.ஏ.எம்.பாயிஸ்

மோசமான காலநிலை மாற்றத்தின் காரணமாக மாவட்டத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் மற்றும் மரங்கள் சரிந்து விழுதல் போன்ற பல காரணங்களால் நேற்று முன்தினம் வரை 242 குடும்பங்களைச் சேர்ந்த 945 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட காலநிலை அவதான நிலைய அதிகாரிகள் நேற்று முன்தினம் (8) தெரிவித்தனர்.

பெல்மதுளை பிரதேச செயலகப் பிரிவின் றில்ஹேன தோட்டத்தில் மண்சரிவு ஏற்படும் அவதான இடங்களில் வசிக்கும் 22 குடும்பங்களைச் சேர்ந்த 122 பேருக்கு வசிப்பிடங்களிலிருந்து இடம்பெயருமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், தற்போதைய சூழ்நிலையில் தமக்கு இடம்பெயர்ந்து சென்று தங்கி நிற்பதற்கு இடமில்லையெனக் கூறி இக்குடும்பங்கள் தொடர்ந்தும் பல சிரமங்களுக்கு மத்தியில் அவ்விடங்களிலேயே தங்கியிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தின் 11 செயலகப் பிரிவுகளில் அறிவிக்கப்பட்ட மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை மேலும் தொடர்வதாக இரத்தினபுரி மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நீதிபதி சரவணராஜா விவகாரத்துக்கு நீதியான விசாரணையை வலியுறுத்தி முல்லை இளைஞர்கள் கவனயீர்ப்பு





மகஜரும் கையளிப்பு

விஜயரத்தினம் சரவணன்

நீதிபதி சரவணராஜா விவகாரத்துக்கு நீதியான விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்களால் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று (09) வாயில் கறுப்புத்துணி கட்டி, பதாகைகளைத் தாங்கியவாறு அமைதியான முறையில் கவனயீர்ப்பு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை, குறித்த கவனயீர்ப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து நீதியமைச்சு மற்றும் நீதியமைச்சின் செயலாளர் ஆகியோருக்கான மகஜர் ஒன்றும் முல்லைத்தீவு மேலதிக மாவட்ட செயலாளர் கனகசபாபதி கனகேஸ்வரனிடம் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்களால் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த மகஜரில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு கொடுக்கப்பட்ட அழுத்தம் மற்றும் அச்சுறுத்தல் காரணமாகவே அவர் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு நீதிபதி தனியாக முல்லைத்தீவு மாவட்டம் மீது கரிசனை செலுத்தி தனது சுயவிருப்பின்பேரில் எந்தத் தடை உத்தரவையும் பிறப்பிக்கவில்லை என்பதுடன், சட்டத்தின் பிரகாரமே செயற்பட்டார் எனவும் குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் நீதிபதி பதவி விலகும் அளவுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டமையாலேயே அவர் பதவி துறந்துள்ளார் எனவும் இம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே, இந்த விவகாரத்தில் முறையானதும் நீதியானதுமான விசாரணைகளை நடத்துமாறு முல்லைத்தீவு மாவட்டசெயலர் ஊடாக நீதியமைச்சு மற்றும் நீதியமைச்சின் செயலாளர் ஆகியோரை முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்கள் கோருவதாகவும் குறித்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் குறித்த கவனயீர்ப்பு நடவடிக்கைகளில் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்களுடன் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் இரத்தினம் ஜெகதீசன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன், பீற்றர் இளஞ்செழியன், வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் மரியசுரேஸ் ஈஸ்வரி, சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வாள்வெட்டுத் தாக்குதலில் இளைஞர் காயம்

நல்லூர், அரசடி பகுதியில் நேற்று முன்தினம் (08) இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த இளைஞர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வெள்ளை நிற காரில் வந்த நான்கு பேரைக்கொண்ட வன்முறைக் கும்பல் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த 28 வயதான இளைஞரே காயமடைந்தார். மேலும் இச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நீதியை நிலைநாட்டும் நீதிபதி ஒருவர் வெளியேறிய பின்னரும் ஏன் மௌனம் காக்கின்றீர்கள்?

## முன்னாள் எம்.பி. சரவணபவன் கேள்வி

சாவகச்சேரி நிருபர்



இந்தியாவின் அரண் தமிழர்கள் தான். இனியாவது எங்களுக்காகக் குரல் கொடுங்கள். இந்த நாட்டின் நீதியை நிலைநாட்டும் நீதிபதி ஒருவர் வெளியேறிய பின்னரும் ஏன் மௌனம் காக்கின்றீர்கள் - என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ். தாவடிப் பகுதியில் இடம்பெற்ற தாச்சிச் சுற்றுப் போட்டியொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி எமது நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார். ஒரு நாட்டை விட்டு நீதிபதி வெளியேறுகின்றாரென்றால் சாதாரண மக்களுக்கு எவ்வாறு நீதி கிடைக்கப் போகின்றது?

இதற்கான முழுப் பொறுப்பையும் இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கமோ அல்லது நீதி அமைச்சோ இதுவரை இதற்குக் காரணமாக இருக்கின்ற தரப்புக்கெதிராக ஒரு நடவடிக்கையைக் கூட முன்னெடுக்கவில்லை. இலங்கையில் பணியாற்றும் அனைத்து நீதிபதிகளினதும் தீர்ப்புகளுக்கும் இந்த அரசாங்கம் வழிவகுத்துக் கொடுக்க வேண்டும். ஒருவருடைய தீர்ப்பின் மீது நம்பிக்கை இல்லாவிடில் அடுத்தகட்டத்துக்கு நகரலாம். அதைவிடுத்து இவ்வாறான ஜனநாயக ரீதியான முறைகளை விடுத்து பலவந்தமாக இந்தப் பெரும்பான்மையினம் சிந்திக்கின்றது. எதனையும் செய்யலாம், தமிழ் மக்களை விரட்டி தாங்கள் வாழலாம், தமிழ் மக்களின் எந்த விதமான கூட்டும் தேவையில்லை என்று நினைக்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ எவ்வாறு தமிழ் மக்களின் வாக்குகள் தேவையில்லை என்பதைக் கூறி வென்றும் காட்டினாரோ, அதே பாணிக்கு தற்போதைய ஜனாதிபதி செல்வதாகத் தெரிகிறது. அவருடைய ஒவ்வொரு செவ்வியைப் பார்த்தாலும் இது தெட்டத்தெளிவாகப் புலப்படுகிறது.

உதாரணமாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்து தன்னுடைய நியாயங்களை சொல்கிறாரே தவிர, அவர்களின் நியாயங்களைக் கேட்பதாக இல்லை. அவர்கள் என்ன நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள்? இதனை சர்வதேச சமூகம் பார்த்துக்கொண்டு பேசாமல்தான் இருக்கின்றது.

நிச்சயமாக இந்தியா விரைவில் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். வேறு யாராலும் அது முடியாது. நிச்சயமாக பெரும்பான்மை இனம் என்றைக்கும் இந்தியாவுக்கு சார்பாக வரமாட்டாது என்பதனை எடுத்துக் கூறுகின்றேன். இந்தியாவுக்கு ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகின்றேன். இங்கே உங்களுக்கு சார்பாக முதலில் இருக்கக்கூடியவர்கள் தமிழர்கள்தான். பின்புதான் மற்றவர்கள். இதனை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும்.

எங்களுக்கு ஒரு நீதி - நியாயமான வழி பிறக்க வேண்டும். எங்களுக்கு இருந்த பாதுகாப்பு 2009ஆம் ஆண்டுடன் மௌனிக்கப்பட்டு விட்டது. இதற்குப் பின்னர் தாங்கள் நினைத்தவாறு பெரும்பான்மை இனத்தவர்கள் பேசுகின்றார்கள். தமிழர்களை துச்சமாக மதிக்கின்றார்கள். தமிழர்களின் நிலையை மிகக் கேவலப்படுத்துகின்றார்கள். இந்தியாவில் தமிழகம் நமக்காக நிற்கின்றது. ஆனால், முழு இந்தியாவும் நமக்காக நிற்கின்றபோதுதான் நாங்களும் அவர்களுக்கான முழு ஆதரவையும் வழங்க முடியும் – என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com



## போர்க்களமாக மாறிய இசை விழா:

# ஹமாஸ் தாக்குதலில் 260இற்கும் மேற்பட்டோர் பலி!

இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் கடந்த சனிக்கிழமை (06) திடீர் தாக்குதலை நடத்தினர். தரை வழியாக இஸ்ரேல் எல்லைக்குள் நுழைந்து கண்ணில் கண்டவர்களையெல்லாம் சுட்டு வீழ்த்தினர்.

இஸ்ரேலில் ஜெவிஷ் விடுமுறைக் கொண்டாட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இவ்விழாவிற்கு வெளிநாடுகளைச் சேர்ந்த இசைக்கலைஞர்களும் சென்றிருந்தனர்.

இவ் இசை நிகழ்ச்சிகள் காஸா- இஸ்ரேல் எல்லைக்குட்பட்ட கிராமப் பகுதியில் நடைபெற்றன.

இந்த விழாவில் காஸா போராளிகள் திடீரெனப் புகுந்து அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

இத் தாக்குதல் காரணமாக அந்த இடத்தில் கிட்டத்தட்ட 260 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகவும் அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டதாகவும் இஸ்ரேல் மீட்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. விழா ஒழுங்கமைப்பாளர்களையும் விழாவில் கலந்துகொண்டு காணாமல் போனவர்களையும் தேடும் பணியில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஹர்தீப்சிங் நிஜ்ஜார் கொலையில் சீனாவுக்கு தொடர்பு

கனடாவில் கடந்த ஜூன் மாதம் காலிஸ்தான் பயங்கரவாதத் தலைவர் ஹர்தீப்சிங் நிஜ்ஜார் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் இந்தியாவில் தேடப்பட்ட போராளிகள் பட்டியலில் இடம்பெற்றிருந்தவர்.

இவரது கொலைப் பின்னணியில் இந்திய ஏஜெண்டுகளுக்கு தொடர்பிருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பரபரப்பு குற்றச்சாட்டுகளை பகிரங்கமாகத் தெரிவித்தார். இதற்கு கண்டனம் தெரிவித்த இந்தியா, கனடாவின் குற்றச்சாட்டை மறுத்தது. இதன் காரணமாக இந்தியா-கனடா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது.

இந்நிலையில், ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் சீனாவுக்கு தொடர்பிருப்பதாக தற்போது தகவல் வெளியாகியிருக்கிறது. கனடாவின் உள்விவகாரங்களில் ஏற்கனவே சீனா, ரஷ்யாவின் தலையீடு இருப்பதாக குற்றச்சாட்டுகள் இருந்து வருகின்றன. நிஜார் கொலையில் இந்தியாவுக்கும் கனடாவுக்குமிடையே மோதல் நிலைமை நிலவி வருவதால் இதன் மூலம் சீனா பலனடைய திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனால் நிஜ்ஜார் கொலையில் சீனாவுக்கும் சம்பந்தமிருக்கலாமா என்ற சந்தேகம் தற்போது கிளம்பியிருக்கிறது.

உலக செய்திகள்

## ஹமாஸுக்கு ஈரான், சிரியா, லெபனான் ஆதரவு

ஹமாஸ் போராளிகளுக்கு ஈரான், சிரியா மற்றும் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா போராளிகள் அமைப்பு ஆதரவாக உள்ளது.

ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சு விடுத்துள்ள செய்தியில், '' ஹமாஸ் தாக்குதலானது ஆக்கிரமிப்பாளர்களின் முன்னிலையில் பலஸ்தீன மக்களின் நம்பிக்கைக்கு சான்றாக உள்ளது. ஹமாஸ் அமைப்பினருக்கு பலஸ்தீன பகுதி மற்றும் மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள இதர நாடுகளிலும் ஆதரவாளர்கள் உள்ளனர்'' - எனத் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் தாக்குதலால் பெருமிதமடைகிறோம் என ஈரான், சிரியா மற்றும் யமன் ஆகிய நாடுகள் கூறியுள்ளன. இந்தச் சூழலுக்கு இஸ்ரேல்தான் பொறுப்பேற்க வேண்டும் என கட்டாரும் தெரிவித்துள்ளது.



## ஷாருக்கானுக்கு Y+ பாதுகாப்பு

பொலிவுட் திரையுலகின் முன்னணி நடிகராக வலம் வருபவர் ஷாருக்கான். இவர் நடிப்பில் இந்த ஆண்டு வெளியான பதான், ஜவான் என இரண்டு படங்களும் 1000 கோடிக்கு மேல் வசூலைக் குவித்தது. இப்படங்களின் வெற்றி மூலம் ஷாருக்கான் ஒரே ஆண்டில் இரண்டு ஆயிரம் கோடி வசூலைக் கொடுத்த நடிகர் என்ற சாதனையைத் படைத்துள்ளார்.

இந்நிலையில், சமீபகாலமாக நடிகர் ஷாருக்கானுக்கு சமூக வலைத்தளங்கள் மூலமாக அடிக்கடி மிரட்டல்கள் வந்த வண்ணம் உள்ளன. இதையடுத்து அவருக்கு வை பிளஸ் (Y+) பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அவருக்கு 6 கமாண்டோக்கள், 4 பொலிஸார் உள்ளிட்ட 11 பேர் பாதுகாப்பளிக்கிறார்கள்.

கடந்த 5ஆம் திகதி மாநில உள்துறை, மூத்த பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புப் படை உள்ளிட்ட துறைகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தது. அதில் நடிகர் ஷாருக்கானுக்கு சமீபத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்களைக் கருத்திற்கொண்டு அடுத்த உயர்மட்டக் குழுவின் பரிந்துரை மற்றும் மறு ஆய்வுக்குழுவின் முடிவு வரும்வரை அவருக்கு வை பிளஸ் பாதுகாப்பு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி நடிகர் ஷாருக்கானுக்கு வை பிளஸ் (Y+) பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

## ஐ.எஸ்.ஐ.எஸ்., அல் - கைடா போன்றது ஹமாஸ்: ஐ.நாவுக்கான இஸ்ரேல் தூதர் கண்டனம்



போராளிகள் அமைப்புகளான ஐ.எஸ்.ஐ.எஸ்., அல் - கைடா போன்றது ஹமாஸ் அமைப்பு என்று ஐ.நாவுக்கான இஸ்ரேல் தூதர் கிலாட் எர்டன் தெரிவித்துள்ளார்.

காஸா பகுதியில் உள்ள ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு கடந்த 7ஆம் திகதி இஸ்ரேல் மீது திடீர் தாக்குதலை தொடங்கியதில் இரு தரப்பினருக்கும் பல இழப்புகள் ஏற்பட்டுள்ளன என பெஞ்சமின் நேதன்யாகு அறிவித்துள்ளார்.

இந்நிலையில், ஐ.நா. தலைமையகத்தில் உரையாற்றிய ஐ.நாவுக்கான இஸ்ரேல் தூதுவர் கிலாட் எர்டன், "இன அழிப்பை மேற்கொள்ளும் பயங்கரவாத அமைப்பு ஹமாஸ். யூதர்களைப் பார்த்தால் அவர்களை முஸ்லிம்கள் கொல்ல வேண்டும் என ஹமாஸ் அமைப்பின் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் யூத மதத்தைச் சேர்ந்த குழந்தைகள் உட்பட அனைவரையும் கொல்லத் துடிக்கிறார்கள். ஒரு யூதர் உயிரோடு இருக்கும் வரை அவர்கள் சண்டையை நிறுத்த மாட்டார்கள்.

மேலும் எமது மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்குத் தேவையான அனைத்தையும் நாங்கள் செய்வோம். இன்று பல நாடுகள் எங்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. நாளை எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்பதை வரலாறு எங்களுக்கு கற்றுத் தந்திருக்கிறது. இஸ்ரேல் விடயத்தில் சர்வதேச சமூகத்துக்கு குறிப்பாக, ஐ.நாவுக்கு நினைவுத்திறன் மிகக் குறைவு. இதற்கு முன் இருந்திராத பதிலடியை நாங்கள் கொடுப்போம். நாங்கள் சமநிலையை மாற்றிக்கொண்டிருக்கிறோம்.

ஹமாஸ் ஏற்படுத்தியுள்ள பயங்கரவாத கட்டமைப்புகள் இம்முறை முழுமையாக ஒழிக்கப்படும். மீண்டும் அவர்கள் எங்கள் மீது தாக்குதல் நடத்த முடியாத நிலையை நாங்கள் அவர்களுக்கு ஏற்படுத்துவோம். இந்த மோதலில் இஸ்ரேல் முன்னணியில் இருக்கிறது. உலக நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதரவளிக்க வேண்டும். ஏனெனில், இந்தப் போர் இஸ்ரேலுக்கானது மட்டுமல்ல; இது சுதந்திரமான உலகை உருவாக்குவதற்கானது. இந்தப் போரில் இஸ்ரேல் வெற்றிபெறாவிட்டால் உலகம் மிகப் பெரிய விலையைக் கொடுக்கவேண்டியிருக்கும்" எனத் தெரிவித்தார்.

## போரை நிறுத்துமாறு போப் பிரான்ஸிஸ் வேண்டுகோள்



வத்திக்கான் நகரில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் ஞாயிற்றுக்கிழமை சிறப்பு பிரார்த்தனைக்குப் பிறகு பொதுமக்கள் மத்தியில் பேசிய கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்ஸிஸ் இஸ்ரேல்-ஹமாஸ் போர் குறித்து வேதனை தெரிவித்தார்.

இது குறித்து மேலும் குறிப்பிடுகையில், "இஸ்ரேலில் தற்போது நடப்பதைப் பார்த்தால் அச்சமும் வேதனையும் அளிக்கிறது. பயங்கரவாதமும் போரும் தீர்வுகளைக் கொண்டுவருவதில்லை, மரணத்தை மட்டுமே கொண்டுவருகின்றன. போர் ஒரு தோல்வி. ஒவ்வொரு போரும் தோல்விதான். எனவே, போரை உடனடியாக நிறுத்தும்படி இருதரப்பினரையும் வேண்டுகிறேன்" என்றார்.

இதனிடையே இஸ்ரேல்-பலஸ்தீனத்துக்கு மிடையே பதற்றம் அதிகரித்து வருவது குறித்து கவலை தெரிவித்துள்ள சீனா, நிலைமை மேலும் மோசமடைவதைத் தவிர்க்கவும், பொதுமக்களைப் பாதுகாக்கவும் அமைதி காக்கும்படி இருதரப்பினரையும் வலியுறுத்தியுள்ளது.

## பொருளாதாரத்துக்கான நோபல் கிளாடியா கோல்டினுக்கு



கடந்த சில நாட்களாக நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே இயற்பியல், வேதியியல், அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் 2023 - 24ஆம் ஆண்டுகளுக்கான பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு கிளாடியா கோல்டின் என்பவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கான தொழில் வாய்ப்புகள் குறித்த புரிதலை மேம்படுத்தியதற்காக இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கிளாடியா கோல்டி என்பவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர் என்பதும் கடந்த பல ஆண்டுகளாக இவர் பொருளாதார நிபுணராக இருந்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ்மொழித் தினப் போட்டி;

# இலக்கிய நாடகப் போட்டியில் புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரி முதலிடம்



கொழும்பு இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்மொழித் தின மாகாண மட்ட இலக்கிய நாடகப் போட்டியில் புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரி, கொழும்பு - 13 முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளது.

மேலும், பிரிவு 4 தனிநடிப்புப் போட்டியில் மாகாண மட்டத்தில் இப்பாடசாலையைச் சேர்ந்த க.தருண்குமார் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

ம. சந்திரிக்கா பிரியங்கனி ஆசிரியையின் நெறியாள்கையின் கீழ் உருவாக்கப்பட்ட "ஈகையின் இருக்கை" எனும் இந்நாடகத்தில் 12 மாணவக்கலைஞர்களும் 4 பின்னணி வாத்தியக் கலைஞர்களும் பங்குபற்றினர்.







**களுத்துறை மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளனத்தின் 22 ஆவது பரிசளிப்பு விழா சனிக்கிழமை (07) பாணந்துறை அம்பலந்துவை இல்மா முஸ்லிம் வித்தியாலய மைதானத்தில் சம்மேளனத்தின் தலைவர் எம்.எச்.எம். உவைன் தலைமையில் நடைபெற்றது.**

**நிகழ்வில் பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் விஷேட அதிதியாக புத்தசாசன மற்றும் மத விவகார கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் கலந்து கொண்டனர்.அத்தோடு, மலேசிய நாட்டுத் தூதுவர் பத்லி இசாம் ஆதமிக்கு நினைவுச் சின்னம் வழங்குவதையும் அதிதிகள், மாணவர், ஆசிரியர்களுக்கு விருது வழங்கி கௌரவிப்பதையும் காணலாம். (படங்கள் - கம்பளை ரா.சேகர்)**



**கொழும்பு, டாம் வீதி பொலிஸாரும் கொச்சிக்கடை தெற்கு சமூக பொலிஸ் குழுவும் இணைந்து நடத்திய மீலாத் விழாவும் பரிசளிப்பு நிகழ்ச்சியும் டாம் வீதி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜித் பேதுரு ஆரச்சி தலைமையில் சனிக்கிழமை மாலை கொழும்பு -12 ரிபாய்தங்கள் ஒழுங்கையில் நடைபெற்றன.விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சங்கைக்குரிய அல்- ஹாஜ் முஹம்மத் ஆஷிக் தங்கள் அவர்களுக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நினைவுச் சின்னம் வழங்குவதையும் அருகில் சமூக பொலிஸ் குழு உறுப்பினர் அல் - ஹாஜ்.எம்.எஸ். எம்.ஷபீக் மற்றும் கலந்து கொண்ட மாணவர்களையும் காணலாம். (படம்: சலீம்)**

## ஈரான் இஸ்லாமியக் குடியரசு தூதரகத்தின் மீலாதுன் நபி விழா





கொழும்பில் உள்ள ஈரான் இஸ்லாமியக் குடியரசு தூதரகத்தின் கலாசார நிலையம் ஏற்பாடு செய்திருந்த மீலாதுன் நபி விழா மற்றும் அகில இலங்கை கிராத் மற்றும் ஹிப்ழ் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு என்பன அண்மையில் கலாசார நிலைய கேட்போர் கூடத்தில் கலாசாரப் பிரிவு கவுன்சிலர் கலாநிதி பி. மோ.அஸாமி குடார்சி தலைமையில் நடைபெற்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகள், சான்றிதழ்களை வழங்கிவைத்தார்.

இலங்கைக்கான புதிய ஈரான் இஸ்லாமியக் குடியரசுத் தூதுவர் கலாநிதி அலி ரெஸா டெல்கோஷ் மற்றும் கலாசார ஆலோசகர் கலாநிதி பி. மொ.அஸாமி குடார்சி ஆகியோரும் விருதுகள்,சான்றிதழ்களை வழங்கிவைத்தனர்.

ஹிப்ழ் போட்டியில் வெற்றிபெற்ற பாணந்துறையைச் சேர்ந்த ஆண்கள் பிரிவு அல்-ஹாபிழ் மொஹமட் ரிஸ்னி ஸாரூக் விருது மற்றும் சான்றிதழைப் பெற்றுக்கொண்டார்.

ஈரான் இஸ்லாமிய குடியரசு தூதரகத்தின் பொருளாதார மற்றும் தூதரகப் பிரிவுத் தலைவர் கே.சோஹைல், அரசியல் பிரிவின் தலைவர் செயிட் மொஸ்தபா ஹஷீமி, மூத்த ஊடகவியலாளர் கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியர் மொஹமட் ரசூல்தீன், மதரஸத்துல் ஹுதா அதிபர் உஸ்தாத் காரி எம். நுஃமான் அதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.







**மீலாதுன் நபி தினத்தையொட்டி கல்வியமைச்சு ஏற்பாடு செய்திருந்த மீலாத் தின நிகழ்வு கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.**

# அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் மீலாத் நிகழ்வு




அக்கரைப்பற்று செய்தியாளர்

அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் மீலாத்தின நிகழ்வு கல்லூரி கலாசாரக் குழுவின் ஏற்பாட்டில் அதிபர் நஜீமா ஹாறுதீன் தலைமையில் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முஹம்மத் நபி(ஸல்) அவர்களின் சிறப்புகள் பற்றி கல்லூரி மாணவிகளின் நிகழ்ச்சிகள் பல அரங்கேற்றப்பட்டதுடன், அதிதிகளின் சிறப்பு சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்-ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ், சிறப்புச் சொற்பொழிவாளர் கலாநிதி யூ.எல்.எம்.அஸ்லம், பிரதிக் கல்விப் பணிப்பாளரும் பாடசாலை மேம்பாட்டுத் திட்ட இணைப்பாளருமான ஏ.எஸ்.அஹமட் கியாஸ், இஸ்லாம் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் அஷ்-ஷெய்க் ஏ.ஆர்.ஏ.மனாப், இஸ்லாம் பாட ஆசிரிய ஆலோசகர் அஷ்-ஷெய்க் என்.ரி.நஸீர், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிறைவேற்றுக் குழுச் செயலாளர் எஸ்.ஆர்.ஹுஸைன், பழைய மாணவிகள் சங்கச் செயலாளர் எல்.ஏ.றுஸானா சிறாஜ் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.



**ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை அல்-அர்ஹம் வித்தியாலய ஆசிரியர்களுக்கான ரீ சேட் அறிமுகம் செய்துவைக்கும் நிகழ்வு அதிபர் தலைமையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.றஸ்மி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கான ரீ சேட்களை வழங்கி வைத்தார்.**

**(கோணாவத்தை செய்தியாளர்)**

# 35 வருட தபால் சேவையிலிருந்து ஓய்வு

ஏ.அகீல் சிஹாப்



22 வருடங்கள் இரண்டாம் தர தபால் அதிபராகவும் 13 வருடங்கள் முதல்தர தபால் அதிபராகவும் பணியாற்றிய ஏ.எம்.அமீர் தனது 35 வருடகால தபால் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

1988ஆம் ஆண்டு இரண்டாம் தர தபால் அதிபராக அஞ்சல் திணைக்களத்தின் மட்டக்களப்பு தபால் அலுவலகத்தில் தனது சேவையை ஆரம்பித்த இவர், கடந்த 2010ஆம் ஆண்டிலிருந்து முதலாம் தர தபால் அதிபராக காரைதீவு தபால் அலுவலகத்தில் பணியைத் தொடர்ந்தார்.

அகில இலங்கை சமாதான நீதவானான இவர், 2023.10.05ஆம் திகதி வியாழக்கிழமை தனது 60ஆவது வயது பூர்த்தியுடன் அட்டாளைச்சேனை தபால் அலுவலகத்திலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

மட்டக்களப்பு, சம்மாந்துறை, கல்முனை, காரைதீவு, ஒலுவில், நிந்தவூர் மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய தபால் அலுவலகங்களில் கடமையாற்றியிருந்த இவரின் சேவையைப் பாராட்டி பிரியாவிடை நிகழ்வு வியாழக்கிழமை(05) அட்டாளைச்சேனை தபால் அலுவலகத்தில் அதன் ஊழியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது நினைவுச்சின்னம், பரிசுப்பொருட்கள் ஆகியன வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட அஹமது முஹைதீன் - மீராலெப்பை பாத்தும்மா தம்பதிகளின் நான்காவது புதல்வரான இவர், 'தமிழன்' பத்திரிகையின் விளையாட்டுச் செய்திப் பொறுப்பாளர் ஏ.அகீல் சிஹாப்பின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது.




# அரபுக் கல்லூரி ஆசிரியர்களுக்கான செயலமர்வு




ஒலுவில்

அம்பாறை மாவட்ட அரபுக் கல்லூரிகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளுக் கான இருநாள் செயலமர்வு 07ஆம், 08ஆம் திகதி களில் ஒலுவில் கிறீன் விலாவில் நடைபெற்றது.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச்செயலமர்வை அஷ்-ஷெய்க் அன்சார் மௌலானா(நளிமி) நெறிப்படுத்தினார்.

இதன்போது வளவாளராக கலாநிதி அஷ்-ஷெய்க் றவூப் செயின் (நளிமி) கலந்து கொண்டு "இலங்கையில் இன நல்லுறவைப் பேணுவதில் அரபுக் கல்லூரிகளின் வகிபாகம்" மற்றும் "பாட விதானத்தில் சமாதானக் கல்வியை அமுல்படுத்தல்" எனும் தலைப்புகளில் விரிவுரை மேற்கொண்டார்.




**அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர் சித்திரப் போட்டியில் பாலமுனை அல் -ஹிதாயா மகளிர் வித்தியாலய மாணவி எவ்.பாத்திமா இனாயா வெற்றி பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவருக்கான பாராட்டு நிகழ்வு அதிபர் பி.முஹாஜிரின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாணவியை தயார்படுத்திய சித்திரப் பாட ஆசிரியை ஐ.எவ்.முனாசபா மற்றும் வழிநடத்திய அதிபர் ஆகியோர் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.**

**(திராய்க்கேணி செய்தியாளர்)**

# அட்டாளைச்சேனை பிரதேச முன்பள்ளிகளின் ஆசிரியர் தின நிகழ்வு
























எம்.ஐ.எம்.றியாஸ் இஸ்மாயில்

அட்டாளைச்சேனை பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்த சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை (08) ஒலுவில் பரண்தோட்டத்தில் இடம்பெற்றன.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளரும் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. கல்விப் பணிப்பாளருமான ஏ.எல்.பாயிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட முன்பள்ளி பணியகத்தின் முன்னாள் செயலாற்றுப் பணிப்பாளர், ஓய்வுபெற்ற அதிபர், அட்டாளைச்சேனை பிரதேச செயலக குவாசி நீதிமன்ற நீதிபதி ஏ.சீ.சைபுதீன் கலந்துகொண்டார்.

விசேட அதிதியாக சட்டத்தரணி டொக்டர் கே.சமீம், அட்டாளைச்சேனை பிரதேச செயலக முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.ஜெசீலா ரசான், அம்பாறை மாவட்ட முன்பள்ளி பணியகத்தின் அக்கரைப்பற்று காரியாலயத்தின் உத்தியோகத்தர் ஐ.ஏ.ராசி, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களான ஏ.எஸ்.நஜாட் அஹமட், எம்.எஸ்.எம்.பாஹிம், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ், அதிபர் கே.எல்.அமீர், சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எல்.றமீஸ் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஏல்.பாயிஸின் அர்ப்பணிப்புகளுடனான கல்விப் பணியைப் பாராட்டி பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னங்கள் வழங்கியும் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

முன்பள்ளி ஆசிரியர்களின் பல்வேறுபட்ட கலை, கலாசார நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டமை விசேட அம்சமாகும். ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வருகை தந்த அனைத்து ஆசிரியர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

பல்தரப்பட்ட சேவைகளைப் பாராட்டி பிரதம அதிதி ஏ.சீ.சைபுதீன், கௌரவ அதிதி சட்டத்தரணி கே.சமீம் ஆகியோர் பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னங்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

# தோணி கவிழ்ந்ததில் இருவர் உயிரிழப்பு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, சீலாமுனை பகுதியிலிருந்து நாவலடி பிரதேசத்துக்கு மட்டுவாவி ஊடாக 06 பேர் பயணித்த தோணி கவிழ்ந்ததில் நீரில் மூழ்கிய நிலையில் இருவர் சடலமாக மீட்கப்பட்டதுடன், 04 பேர் நீந்தி உயிர்தப்பியுள்ளனர். இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (08) மாலை இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சீலாமுனையைச் சேர்ந்த 19 வயதுடைய தவசீலன் கிருசாந்தன், மாமாங்கத்தைச் சேர்ந்த 18 வயதுடைய பிரபாகரன் பிருந்தயன் ஆகிய இருவருமே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவு சீலாமுனை, மாமாங்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் 06 பேர் 'ரிக்ரொக்' வீடியோ தரவேற்றம் செய்வதற்காக சம்பவதினம் காலை 11 மணியளவில் சீலாமுனையிலிருந்து தோணியூடாக வாவியில் பயணித்து நாவலடிக்குச் சென்று அங்கு வீடியோ மற்றும் புகைப்படங்களை எடுத்துவிட்டு மீண்டும் சீலாமுனைக்கு திரும்பியபோது தோணியில் கட்டப்பட்ட குள்ளாந்தடி இரண்டாக உடைந்ததையடுத்து தோணி வாவியில் கவிழ்ந்துள்ளது.

இதனையடுத்து, அனைவரும் நீரில் மூழ்கிய நிலையில் 04 பேர் நீந்தி கரை சேர்ந்ததுடன் இருவர் காணாமல்போயிருந்ததையடுத்து மீனவர்களின் உதவியுடன் அவர்களை தேடியநிலையில் நாவலடி பகுதியில் அவர்கள் சடலமாக மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்ட இருவரும் மட்டு. போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டுள்ளதாகவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

# நிகழ்நிலை காப்புச் சட்டமூல முன்மொழிவை மீளப்பெறக் கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

## மட்டு. பெண்கள் வலையமைப்பு ஏற்பாடு









கனகராசா சரவணன்

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் ஆகியவற்றை மீளப்பெறவேண்டும் என வலியுறுத்தி மட்டக்களப்பில் நேற்று திங்கட்கிழமை (09) எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த ஆர்ப்பாட்டமானது கல்லடி பாலத்திலிருந்து காந்தி பூங்காவரையில் கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலமாக இடம்பெற்றது.

இவ்ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது ''உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதிவேண்டும், அனைத்து மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்து, முன்மொழியப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை மீளப்பெறு, ஊடக சுதந்திரம் மற்றும் சுயாதீனம் வேண்டும், தகவல்களை அறிவதற்கும் கருத்து சுதந்திரம் எங்களது அடிப்படை உரிமையாகும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைபை மீளப்பெறு, சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவது எங்களது சுதந்திரத்தை உங்களால் மட்டுப்படுத்தமுடியாது'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, பயங்கரவாத மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலங்களை இல்லாமல் செய்யுமாறு அரசாங்கத்தை கோருவதாகவும் தெரிவித்து அங்கிருந்து கலைந்து சென்றனர்.





திருகோணமலை நகரசபை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலக நடமாடும் சேவை சனிக்கிழமை (07) இடம்பெற்றது. திருகோணமலை மனையாவெளி மகளிர் பொது மண்டபத்தில் இடம்பெற்ற நூலக கண்காட்சியும் நடமாடும் நூலக சேவையும் திருகோணமலை நகரசபையின் செயலாளர் வெ.இராஜசேகர் தலைமையில் இடம்பெற்றது.

(கிண்ணியா செய்தியாளர்)

# மின்சாரம் தாக்கி மாணவன் பலி





தோப்பூர் செய்தியாளர்

தனது வீட்டில் செயலிழந்திருந்த மின்குமிழ்களை திருத்தும்போது மின்சாரம் தாக்கி பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (08) மாலை இடம்பெற்றுள்ளது.

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லைநகர் தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த கில்லுறுதீன் முஹம்மட் அம்ஹர் என்ற 16 வயதான மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தோப்பூர் அல்-ஹம்றா மத்திய கல்லூரியில் தரம் 11இல் கல்வி கற்று வருவதோடு இம்முறை க.பொ.த. சா/த பரீட்சை எழுதவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உயிரிழந்த மாணவனின் சடலம் தோப்பூர் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மரண விசாரணையைத் தொடர்ந்து திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

இம்மாணவனின் ஆன்ம ஈடேற்றத்துக்காக அல்-ஹம்றா மத்திய கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்களால் நேற்று திங்கட்கிழமை (09) விசேட துஆப் பிரார்த்தனையும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கல்முனையில் மார்க்க விசேட ஒன்றுகூடல்




அட்டப்பள்ளம் செய்தியாளர்

கல்முனை ஹுதா அழைப்பு வழிகாட்டல் பணியகம், ஹுதா ஜும்ஆப் பள்ளிவாசல் தஃவா குழுவினரின் ஏற்பாட்டில் மாபெரும் விசேட மார்க்க ஒன்றுகூடல் ஹுதா ஜும்ஆப் பள்ளிவாசலில் பேஷ் இமாம் ஜே.எம்.ஸாபித் (ஸரயி, றியாதி) அவர்களின் வழிகாட்டலில் அண்மையில் (06) இடம்பெற்றது.

முக்கியமான மூன்று தலைப்புகளை உள்ளடக்கியதாக நடந்த இவ் ஒன்றுகூடலில், கண்ணியமிக்க உலமாக்களான அஷ்-ஷெய்க் ஆதில் ஹஸன்- "முந்தைய உலக வாழ்வை விட பிந்திய மறுமை வாழ்வே சிறந்தது" எனும் தலைப்பிலும், அஷ்-ஷெய்க் பிர்னாஸ் (மன்பஈ) - "அகிலத்தாருக்கு ஓர் அருட்கொடை நபிகள் நாயகம் (ஸல்) அலைஹி வஸல்லம் அவர்கள் " எனும் தலைப்பிலும், அஷ்-ஷெய்க் அனஸ் (ஹாமி) "வெற்றியின் பக்கம் விரைந்து வாருங்கள்" எனும் தலைப்பிலும் உரையாற்றினர்.

இங்கு ஹுதா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபை, ஹுதா அழைப்பு வழிகாட்டல் பணியகம் தஃவா குழு உறுப்பினர்கள், பெருந்திரளான பொதுமக்கள், பெண்கள் என இருபாலாரும் கலந்துகொண்டனர்.

## போடியார் புலம்பல்!



***சர்வதேச விசாரணை தவிர்க்கவே முடியாதாம் எண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா புள்ள கூறி இருக்காவு எலுவா? அவ கூறுவதில ஒள்ளுப்பம் நியாயம் இருக்குத்தான். ஆனா அந்த நரி அத தட்டிக்கழிச்சு எலுவா தெரு சண்டியன்போல செயல்படுறாரு. அந்த மனிசன் நல்லா குழம்பிபோய் இருக்காரு. வாற வருஷம் ஜனாதிபதி தேர்தலா..? இல்லாட்டி பாராளுமன்ற தேர்தலா நடத்திறது எண்டதில அவரே முடிவு எடுக்காம திண்டாடக்குள பதற்றமாக கதைச்சித்தான் அவர் காலத்த ஓட்டுவாரு போல.***

# கடலரிப்பை கட்டுப்படுத்த அலைத் தடுப்புச் சுவர்

## பைசால் காசிம் எம்.பியால் ஆரம்பித்துவைப்பு



திகாமடுல்ல,சாய்ந்தமருது செய்தியாளர்கள்

அம்பாறை, காரைதீவு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மாளிகைக்காடு பிரதேசத்தில் உக்கிரமடைந்துள்ள கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான அலைத் தடுப்புச் சுவர் அமைக்கும் வேலைத்திட்டம் ஞாயிற்றுக்கிழமை (08 ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் பிரகாரம் கடலரிப்பைத் தடுப்பதற்கான நிரந்தரத் தீர்வாக கரைக்குக் குறுக்காக கல் வீதி அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாளிகைக்காடு கிழக்கு வட்டார அமைப்பாளர் எம்.எச்.நாஸர் தலைமையில் மாளிகைக்காடு அந்-நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி மின்ஹாஜின் துஆப் பிரார்த்தனையுடன் ஆரம்பித்துவைக்கப்பட்ட இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் பிரதம அதிதியாக பங்கேற்றிருந்தார்.

இதன்போது அவர் உரையாற்றுகையில்,

நான் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தும் இத்திட்டத்தை மிக விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு முழுமையாக உதவிய ஜனாதிபதிக்கு விசேட நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இப்பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் இவ்வேலைத்திட்டத்தை குறுகிய காலத்தினுள் துரிதமாக நிறைவுசெய்யுமாறு பொறியியலாளர் உள்ளிட்ட அதிகாரிகளை வேண்டிக்கொள்கின்றேன் என்றார்.

இதேவேளை, இவ்வேலைத்திட்டம் இவ்வளவு விரைவாக ஆரம்பமாவதற்கு அயராது உழைத்த பைசல் காசிம் எம்.பிக்கு அதிகாரிகள் மற்றும் பொது அமைப்பினரால் இதன்போது நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் ஜெ.ஜெகராஜன், கரையோரம் பேணல் திணைக்களத்தின் கிழக்குப் பிராந்திய பொறியியலாளர் எம்.துளசிதாஸன், அந்-நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் செயலாளர் முஹம்மத் ரஊபி, மாளிகைக்காடு மீன் மொத்த வியாபார சங்கத்தின் தலைவர் எம்.நௌஷாத், செயலாளர் எம்.பைசர் மற்றும் உறுப்பினர்கள், ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர் எம்.எம்.அனுவர் உள்ளிட்ட உறுப்பினர்கள், உலமாக்கள் மற்றும் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து அதிபர்களுக்கான செயலமர்வு

சாய்ந்தமருது, பொலிவேரியன் செய்தியாளர்கள்



முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மற்றும் டயகோனியா அமைப்புகளின் அனுசரணையில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அதிபர்களை தெளிவுபடுத்தும் விழிப்புணர்வுச் செயலமர்வொன்று



ஞாயிற்றுக்கிழமை (08) இடம்பெற்றது.

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் அதிபர் ஏ.ஜீ.எம்.றிசாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை கல்வி வலயத்திலிருந்து முதல் கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட இருபது பாடசாலைகளின் அதிபர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.ஏ.அஸீஸ் வளவாளராக கலந்துகொண்டு, பல ஆக்கபூர்வமான கருத்துகளை முன்வைத்து விடயங்களைத் தெளிவுபடுத்தினார்.

பாடசாலைச் சூழலில் அதிபர்கள் தினமும் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக இதன்போது அதிபர்களால் முன்வைக்கப்பட்ட வினாக்களுக்கும் அவர் தெளிவான விளக்கங்களை வழங்கினார்.

# "சிறுவர்களுக்கான சரீர தண்டனையை ஒழிப்போம்" வவுணதீவில் விழிப்புணர்வு நிகழ்வு





மண்முனை செய்தியாளர்

''சிறுவர்களுக்கான சரீர தண்டனையை ஒழிப்போம்'' என்ற தலைப்பிலான சிறுவர்களை பாதுகாக்கும் விழிப்புணர்வு நிகழ்வு திங்கட்கிழமை (09) வவுணதீவில் இடம்பெற்றது.

சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கான இளைஞர் கூட்டணி, சயில்ட் பண்ட் (child Fund) ஏயூ லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து மாபெரும் கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

வவுணதீவு பிரதேச செயலகத்துக்கு முன்னால் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், இலங்கை போக்குவரத்துச் சபை மட்டக்களப்பு சாலை முகாமையாளர், ஏயூ லங்கா நிறுவனப் பிரதிநிதிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பெருமளவான பொதுமக்கள் கலந்துகொண்டு கையெழுத்திட்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# போதைப்பாவனையை முற்றாக துடைத்தெறியாமல் நிலவுக்குப் போவதைப்பற்றி சிந்திக்க முடியாது

## மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சபீஸ்

மாளிகைக்காடு செய்தியாளர்

போதை ஒழிப்புக்கான வினோத உடைப் போட்டியானது என்னை வியப்பில் ஆழ்த்தியது. இது சமூகத்துக்கு சொல்லும் ஒரு செய்தியாகும். போதையை எமது சமூகத்திலிருந்து முற்றாக துடைத்தெறியாமல் நாம் நிலவுக்கு போவதைப்பற்றி சிந்திக்கமுடியாது - என கிழக்கின் கேடயம் பிரதானியும் அக்கரைப்பற்று மாநகரசபை முன்னாள் உறுப்பினரும் கிழக்கு மாகாண பள்ளிவாசல்கள் சம்மேளன நிறைவேற்றுச் சபை உறுப்பினருமான எஸ்.எம்.சபீஸ் தெரிவித்தார்.

பாலமுனை ஹில்ப் சமூக சேவை மன்ற பாலர் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் சனிக்கிழமை (07) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக எஸ்.எம்.சபீஸ் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர், எமது குழந்தைகளின் ஆரம்பம் பாலர் பாடசாலையில்தான் ஆரம்பிக்கிறது. ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் ஆசிரியராக மாத்திரமல்லாமல், ஒரு தாயாக, வைத்தியராக, சமூகசேவகராக இருந்து எமது குழந்தைகளின் ஆரம்பத்தை தொடக்கி வைக்கின்றார்கள்.

பெற்றோர் தமது பிள்ளைகள் வைத்தியராக,



பொறியியலாளராக, சட்டத்தரணியாக, கணக்காளராக வரவேண்டும் என்று பிரார்த்திப்பது போன்று நல்ல தலைவராகவும் வரவேண்டும் என பிரார்த்திக்க வேண்டும். நல்ல தலைவர்கள் இல்லாத சமூகம் மந்தைக் கூட்டத்துக்குச் சமனாகும். உங்களுக்கு நல்ல சகோதரனாகவும் இந்த குழந்தைகளின் எதிர்காலத்தின்மீது கரிசனை கொண்டவர்களாகவும் நாங்கள் இருப்போம். எங்களுக்காகவும் பிரார்த்தியுங்கள் என்றார்.

# வறுமையான குடும்பத்துக்கு பசு வழங்கல்



கல்லடி செய்தியாளர்

தெரிவுசெய்யப்பட்ட வறுமை நிலையிலுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் "குடும்பத்துக்கு ஒரு பசு வழங்கல்" வேலைத்திட்டம் ஞாயிற்றுக்கிழமை (08) கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபையால் ஆலயத்துக்கு நேர்த்திக் கடனாக கிடைக்கப்பெற்ற பசுக்களை வறுமையான குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் முதற்கட்டமாக போரதீவுப்பற்று பிரதேச செயலகம் - வெல்லாவெளி, மண்முனை மேற்கு பிரதேச செயலகம் - வவுணதீவு, ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகம் - செங்கலடி ஆகியவற்றிலிருந்து பிரதேச செயலாளர் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட தலா இருவர் வீதம் ஆறு பயனாளிகளுக்கு பசுக்கள் வழங்கப்பட்டன.

இதன்போது ஆலய பரிபாலன சபைத் தலைவர் வண்ணக்கர் இ.மேகராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்தக் குருக்கள், செயலாளர் வண்ணக்கர் சி.கங்காதரன், பொருளாளர் வண்ணக்கர் ச.கோகுலகிருஸ்ணன், தேசமகா சபை உறுப்பினர்கள், குடிசார்ந்த தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் மற்றும் பயனாளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# அவுஸ்திரேலியாவை இலகுவாக வீழ்த்திய இந்தியா



நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலிய அணியுடனான ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 49.3 ஓவர்களில் 199 ஓட்டங்களுக்கு 10 விக்கெட்டுகளையும் இழந்தது. அவுஸ்திரேலிய பேட்டிங்கில் டேவிட் வோர்னர் 6 பவுண்டரிகளுடன் 41 ஓட்டங்கள், ஸ்ரீவ் ஸ்மித் 5 பவுண்டரிகளுடன் 46 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது. இறுதியில் மிட்செல் ஸ்டார்க் 2 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 28 ஓட்டங்கள், மார்னஸ் லபுசான் 1 பவுண்டரியுடன் 27 ஓட்டங்கள் சேர்த்தனர்.

பின்னர் இந்திய இன்னிங்ஸில் கேப்டன் ரோஹித் சர்மா, இஷான் கிஷண், ஷ்ரேயஸ் ஐயர் ஆகியோர் டக்அவுட்டாகி அதிர்ச்சி அளித்தனர். 4ஆவது விக்கெட்டுக்கு இணைந்த விராட் கோஹ்லி -ராகுல் கூட்டணி நிதானமாக ஆடி அணியின் ஸ்கோரை உயர்த்தியது. இறுதியில் இந்தியா 41.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 201 ஓட்டங்களை எட்டி வென்றது.

விராட் கோஹ்லி 6 பவுண்டரிகளுடன் 85 ஓட்டங்களுக்கு வெளியேறினார். இறுதியில் ராகுல் 8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 97 ஓட்டங்களைப் பெற்றார்.

# உலகக்கிண்ண சம்பளத்தை நன்கொடையாக வழங்கும் ரஷீட் கான்



ஆப்கானிஸ்தானில் சனிக்கிழமை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 2000ஐ தாண்டியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர் களுக்கு உலகக்கிண்ணப் போட்டியில் தனக்கு கிடைக்கும் சம்பளம் முழுவதையும் நன்கொடையாக வழங்குவதாக ஆப்கானிஸ்தான் பந்துவீச்சாளர் ரஷீட் கான் அறிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் ஹெராத் நகருக்கு வடமேற்கே 40 கி.மீ. தொலைவில் சனிக்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கம் 6.3 ரிச்டர் அளவுகோலில் அலகுகளாகப் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. அந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து 5.5 ரிச்டர் அளவுகொண்ட பின்னதிர்வு ஏற்பட்டதாகவும் அந்த மையம் கூறியது. சுமார் 6 கிராமங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளன. மேலும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இடிபாடுகளுக்கிடையில் சிக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு தனக்கு கிடைக்கும் சம்பளம் முழுவதையும் நன்கொடையாக வழங்கவுள்ளதாக ஆப்கானிஸ்தான் பந்துவீச்சாளர் ரஷீட் கான் அறிவித்துள்ளார்.

மேலும், ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை அறிந்து வருந்துகிறேன். நிதி திரட்டும் நடவடிக்கைகளிலும் ஈடுபடவிருக்கின்றேன் என ரஷீட் கான் மேலும் தெரிவித்துள்ளார்.

# மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவிகள் பதக்க வேட்டை



சாவகச்சேரி நிருபர்

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டிகள் அண்மையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் யாழ். மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு 01 தங்கம், 03 வெள்ளிப் பதக்கங்கள், 02 வெண்கலப் பதக்கங்கள் என்பன கிடைத்தன.

அந்த வகையில் 17வயதுக்குட்பட்ட பளுதூக்கல் போட்டியில் 67kg பளுவை தூக்கி க.பிரணதி 2ஆம் இடத்தையும், 58kg பளுவை தூக்கி இ.மயூரணி 3ஆம் இடத்தையும், 57kg பளுவை தூக்கி ந.வைஸ்ணவி 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

அத்துடன், 20 வயதுக்குட்பட்ட பளுதூக்கல் போட்டியில் 71kg பிரிவில் 90kg பளுவை தூக்கி நீ.மஸ்மிதா 2ஆம் இடத்தையும், 81kg பிரிவில் 55kg பளுவை தூக்கி சு.அபிநயா 1ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கான பயிற்சிகளைப் பயிற்றுவிப்பாளர் ஸ்ரீஸ்கந்தராசா டிலானி மற்றும் உடற்கல்வி ஆசிரியர் நடராசா செந்தூரன் ஆகியோர் வழங்கினர்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# இலங்கைக்கு அபராதம்

தென்னாபிரிக்க அணியுடன் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் மந்தகதியில் பந்துவீசியதற்காக இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்கு அபாராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவுடன் 102 ஓட்டங்களால் படுதோல்வியடைந்த இலங்கை அணி, தமக்கு பந்துவீச வழங்கப்பட்ட நேரத்துக்குள் பந்துவீசத் தவறியிருந்ததோடு குறிப்பிட்ட நேரத்துக்குள் 2 ஓவர்களை குறைவாக வீசியதாக போட்டி மத்தியஸ்தரான ஜவாகல் சிறிநாத் இலங்கை வீரர்கள் மீது குற்றஞ்சுமத்தியிருந்தார்.

எனவே, இந்தக் குற்றச்சாட்டை தசுன் ஷானக்க தலைமையிலான இலங்கைத் தரப்பு ஏற்றிருப்பதோடு, போட்டிக் கட்டணத்தில் 10 சதவீதம் அபாராதமாகவும் செலுத்த ஒப்புக்கொண்டிருக்கின்றது. இதேநேரம் தசுன் ஷானக்க தலைமையிலான தரப்பு குற்றத்தை ஒப்புக்கொண்ட காரணத்தால் குற்றங்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெறாது எனக் கூறப்பட்டிருக்கின்றது.





# பொத்துவில் றபா விளையாட்டுக் கழகத்தின் புதிய சீருடை அறிமுகம்

பொத்துவில் நிருபர்

பொத்துவில் றபா விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய சீருடை அறிமுக நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை பொத்துவில் பொது நூலகக் கேட்போர்கூடத்தில் கழகத்தின் தலைவர் சட்டத்தரணி ஏ.எம்.சாதிர் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கழகத்தின் செயலாளர் ஏ.பி.ஜெஸ்வத் இலாஹி, முகாமையாளர் எம்.ஏ.கபூர், கிரிக்கெட் அணியின் தலைவர் சுர்பின் மற்றும் கழகத்தின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது கழகத்தின் புதிய தலைவராக சட்டத்தரணி சாதிர், செயலாளராக ஜெஸ்வத் ஆகியோர் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டனர்.

றபா விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கெட் அணியினருக்காக கொள்வனவுசெய்யப்பட்ட புதிய சீருடையை கழகத்தின் தலைவர் சட்டத்தரணி சாதிர் இந்நிகழ்வின்போது அறிமுகம் செய்துவைத்தார்.




# பாகிஸ்தானை உலகக்கிண்ணத்தில் முதல் முறையாக வீழ்த்துமா இலங்கை?

ஏ. அகீல் சிஹாப்

13ஆவது ஐ.சி.சி. உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் விறுவிறுப்பாக நடைபெற்றுவரும் நிலையில், இலங்கை அணி தங்களது இரண்டாவது ஆட்டத்தில் இன்றைய தினம் பாகிஸ்தான் அணியை ஹைதராபாத்தில் எதிர்கொள்கிறது.



இலங்கை அணி தங்களது முதல் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியிடம் 102 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது. எனினும், இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் குசல் மெண்டிஸ், சரித் அசலங்க மற்றும் தசுன் சானக்க ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதிலும் அணித்தலைவர் தசுன் சானக்க அண்மைக்காலமாக ஒருநாள் போட்டிகளில் துடுப்பாட்டத்தில் சொதப்பிவந்த நிலையில் தென்னாபிரிக்க அணிடனான ஆட்டத்தில் நிதானமாக துடுப்பாடி அணிக்கு நம்பிக்கை கொடுத்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சு வரிசைதான் படுமோசமாக அமைந்திருக்கிறது. தென்னாபிரிக்க அணி 400க்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவிக்கும் அளவுக்கு இலங்கை அணியின் பந்துவீச்சு படுமோசமாக அமைந்திருக்கிறது. சுழற்பந்துவீச்சு வரிசையில் முன்னணி வீரர் மஹீஷ் தீக்ஷன இல்லாமையும் இதற்கு ஒரு காரணமாக அமைந்திருக்கிறது.

தென்னாபிரிக்க அணியுடன் இலங்கை அணி தோல்வியை சந்தித்திருந்தால் பரவாயில்லை. ஆனால், படுதோல்வியை சந்தித்தமை அணிக்கு இழப்பாகக் காணப்படுகிறது. காரணம், அனைத்து அணிகளும் ஒரே குழுவில் இடம்பெற்று அதில் நான்கு அணிகள் அரையிறுதிக்குத் தெரிவாகின்ற முறை காரணப்படுவதால் நெட் ரன்ரேட் மிக முக்கியமாக அமைகிறது.

இலங்கையின் நெட் ரன்ரேட் - 2.040 பெறுமானத்தில் காணப்படுகிறது. இதனை நேர் பெறுமானத்திற்கு மாற்றுவதற்கு அடுத்துவரும் ஆட்டத்தில் இலகுவான வெற்றிகளை பெறவேண்டிய நிலை காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் இலங்கை அணி தங்களது இரண்டாவது ஆட்டத்தில் இன்று பாகிஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. எனவே, இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதிய போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்தலாம்.

நேருக்கு நேர்

### இதுவரையில் நடைபெற்ற போட்டிகள்

கடந்த 1975ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் வரலாற்று சிறப்புமிக்க முதல் ஒருநாள் போட்டி இங்கிலாந்தின் நொட்டிங்ஹமில் நடைபெற்றது. குறித்த போட்டியில் பாகிஸ்தான் அணி 192 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. அன்றிலிருந்து இன்றுவரையில் இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் 156 ஒருநாள் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இதில் பாகிஸ்தான் அணி 92 போட்டிகளில் வெற்றிபெற்று ஆதிக்கம் செலுத்தும் நிலையில், இலங்கை அணி 59 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. ஒரு போட்டி சமநிலையில் நிறைவடைய 4 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளன.

### இறுதி ஐந்து போட்டிகள்

இரு அணிகளுக்கும் இடையில் இறுதியாக நடைபெற்ற 5 போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்துகின்றபோது, பாகிஸ்தான் அணி முதல் 4 போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கும் நிலையில், இலங்கை அணி இறுதியாக கடந்த மாதம் நடைபெற்ற ஆசியக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தானை வீழ்த்தியிருந்தது.

### ஐ.சி.சி. உலகக்கிண்ண மோதல்

கடந்த 1975ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரின்போது இலங்கை - பாகிஸ்தான் அணிகள் முதல் முறையாக சந்தித்தன. இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றியீட்டியது. அன்றிலிருந்து இன்று வரையில் 8 ஆட்டங்கள் நடைபெற்றுள்ளன. இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், இலங்கை இதுவரையில் பாகிஸ்தானை உலகக்கிண்ணத்தில் வீழ்த்தவில்லை.

இறுதியாக கடந்த 2019ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் மழை காரணமாக போட்டி முழுமையாக கைவிடப்பட்டது. எனவே, இலங்கை அணி முதல் முறையாக உலககக்கிண்ணத்தில் இன்று பாகிஸ்தானை வீழ்த்தி வரலாறு படைக்குமா என்பதைப் பார்க்கலாம்.

## இன்றைய போட்டி




| பங்களாதேஷ் | | இங்கிலாந்து |
|---|---|---|
| 5 | நேருக்குநேர் | 19 |

தர்மசலா காலை - 10.30 மணி

## இன்றைய போட்டி




| இலங்கை | | பாகிஸ்தான் |
|---|---|---|
| 59 | நேருக்குநேர் | 91 |

ஹைதராபாத் பகல் - 02.00 மணி

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7